# காங்கேசன் முரசு -02

## தேசிய வாசிப்பு மாதம்
## ஒக்டோபர் - 2021
## சிறப்பு மலர்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை
VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, K.K.S

வெளியீடு

பொது நூலகம் - காங்கேசன்துறை
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காங்கேசன் முரசு – 02

## தேசிய வாசிப்பு மாதம்

## ஒக்டோபர், 2021

## சிறப்பு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலர் விபரம்

சஞ்சிகையின் பெயர் :- காங்கேசன் முரசு 2

தொகுப்பாசிரியர் :- திருமதி.வி.இரவீந்திரநாத்

பதிப்பு :- 2021

பக்கங்கள் :- $V + 49 + 2$

அச்சிட்டோர் :- சந்நிதியான் பிறிண்டேர்ஸ்

கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழியவாழியவே!
வானமளந்ததனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டுவாழியவே!
எங்கள் தமிழ்மொழிஎங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலிநீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்துமறிந்து
வளர்மொழிவாழியவே!

-மகாகவி சுப்பிரமணியபாரதியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே :-

1. **ஆசிச் செய்திகள்**
   - யாத்திரை செல்லப்பிள்ளையார் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச் செய்தி
   - மாவிட்டபுரம் முருகன் ஆலயம் பிரதம குருக்களின் ஆசிச் செய்தி
2. **வாழ்த்துச் செய்தி**
   - கௌரவ தவிசாளரின் வாழ்த்துச் செய்தி
   - பிரதேசசபைச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி
   - பொறுப்பதிகாரியின் வாழ்த்துச் செய்தி
   - காங்கேசன்துறை அபிவிருத்திச் சங்கத்தலைவரின் வாழ்த்துச் செய்தி
3. **என்னுரை**
4. **கவிதைகள்**
   - வாசிப்பை நேசிப்போம்
   - மரம் வளர்ப்போம்
5. **மாணவர்களின் ஆக்கங்கள்**
   - நல்ல நண்பன் நூல்களே
   - கொரோனா
   - சுகாதார பணியாளர்களின் அர்ப்பணிப்புக்கள்
   - கொவிட் - 19
   - இணையவழிக் கல்வியும் மாணவர்களும்
6. **அங்கத்தவர்களது ஆக்கங்கள்**
   - மறுக்கப்பட்ட வாசிப்பும் முடக்கப்பட்ட சமூகமும்
   - மண் வளத்தைப் பாதுகாக்கும் சேதன விவசாயம்
7. **அலுவலகர்களது ஆக்கங்கள்**
   - கொவிட் - 19 இன் பலனாக எமது சமூகத்தில் ஏற்பட்ட தகவல் தொழினுட்ப மாற்றமும் அதன் விளைவுகளும்
   - கொரோனாவும் மனித வாழ்வும்
   - கொவிட் - 19 உம் தொலைதூர வாசிப்பும்
   - தொலைதூர வாசிப்பு
8. **வாசகர்களது ஆக்கங்கள்**
   - காங்கேசன்துறை பிரதேசமும் சைவாலயங்களும்
   - Impact Of Corona In Education
9. **உள்ளங்கனிந்த நன்றிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர் வெளியீட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் கலை கலாச்சார பண்புகளும் தளைத்தோங்கும் காங்கேசன்துறை மண்ணில் இயங்கும் காங்கேசன்துறை பொதுநூலகத்தால் வெளியிடும்

" காங்கேயன் முரசு – 02" எனும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதற்கு செல்லப்பிள்ளையாரின் அருள்பாலித்துள்ளது. காங்கேசன்துறை முன்னைய காலத்தில் ஜம்புகோளப்பட்டினம் என்று அழைக்கப்பெற்ற புராதன இடமாகும். பிற்பட்ட காலப்பகுதியில் காங்கேயன்துறை என அழைக்கப்பட்டது. இந்த பழைமை வாய்ந்த இடத்திலே பழைமை வாய்ந்த நூலகமாக இருந்த காங்கேசன்துறை பொது நூலகம் இன்று மலர்ந்து வருகின்றது. இந்த நூலகம் படைத்து வெளியிடும் நூல்களின் ஊடாக எமது முன்னோர்களின் கலை கலாச்சாரப் பண்பாடுகள் மற்றும் தற்காலம் சார்ந்த அறிவுசார்ந்த விடயங்களை எல்லாம் இந்த மண்ணில் வாழ்பவர்கள் எல்லாம் கற்று அறிந்து இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வார்கள் என இறைவனை பிரார்த்திக்கின்றேன். இந்த காங்கேசன்துறை பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இம் மலரை வெளியிடுவதற்கு இக்காலத்தில் அரும்பணியாற்றுபவர்களுக்கும் இந்த நூலகம் இன்னும் சிறந்து வரவேண்டும் என்று காங்கேசன்துறை யாத்திரை செல்லப்பிள்ளையாரை பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

**சிவஸ்ரீ தி. இதயராசா**
**குருக்கள்**
**(சிவதர்வு குருக்கள்)**
**பிரதான குரு**
**யாத்திரை செல்லப்பிள்ளையார் தேவஸ்தானம்**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
# MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு,
மாவை ஆதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை,
ஸ்ரீலங்கா

TP: 021 3210349

Maharajasri:
D.S.Ratnasabapathy Kurukkal
Governing Authority & Chief High priest
Mavai Aadheenam,
Maviddapuram,
Tellippalai,
Sri Lanka.

Date: 28/10/2021.

ஆசிச் செய்தி.

சைவநெறியும் தமிழும் செழிக்கும் ஈழத்திருநாட்டிலே வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை பொது நூலகம் ஐப்பசி மாதத்தில் வரும் தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி "காங்கேசன் முரசு-02" என்னும் சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். வாசிப்பு என்பது மனிதனை மனிதனாக்கும் மந்திரமாகும். எவன் ஒருவன் நிறைய வாசிப்பால் உருவாகின்றானோ அவன் யாவரிலும் மேன்மையடைகின்றான். எனவே காங்கேசன் துறை பொது நூலகத்தால் வெளியிடப்படும் சிறப்பு மலர் "காங்கேசன் முரசு-02" வெளியீடு சிறப்புற அமைய சுவாமி நாதனாம் ஸ்ரீ மாவைக்கந்தனை வேண்டி நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

இங்ஙனம்
[signature]

மஹாராஜஸ்ரீ
து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீனகர்த்தா - பிரதம குரு,
ஸ்ரீ கந்தசுவாமி கோவில்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் வடபாலில் குபேர திக்கு திசையில் அனைத்து துறைகளையும் ஒருமித்தே கொண்டுள்ள காங்கேசன்துறை மண்ணில் 31 வருடங்களின் பின்னர் இவ்வருடம் எமது காங்கேசன்துறை பொதுநூலகம் இயங்குவது மட்டற்ற மகிழ்ச்சியான இத் தருணத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காங்கேசன் முரசு சஞ்சிகை வெளி வருகின்றமையும் சிறப்புக்குரியதொன்றாகும். எந்த வீட்டில் நூல்கள் இருக்கின்றதோ அந்த வீட்டில் தான் ஒளி விளக்கு இருக்கின்றது என்பர். அதே போல் தான் எந்த ஊரில் நூல்நிலையம் இருக்கின்றதோ அந்த ஊரில்தான் அறிவான்களும் நிறைந்திருப்பர். பல நூற்றாண்டின் அறிஞர்கள் அனைவரும் கூடியிருக்கும் மாளிகை தான் நூலகம். அந்த மாளிகையின் கதவுகள் இனிவரும் அறிஞர்களுக்காக காங்கேசன்துறை மண்ணில் எப்போதுமே திறந்தே இருக்கும். தனது சேவையை ஆற்றுவதற்காக....

ஒரு நாட்டில் பாடசாலைகள், சமயஸ்தலங்கள் அமைப்பது எவ்வளவு முக்கியமோ அதே போல் நூலகங்கள் அமைப்பதும் மிகவும் அவசியமானதொன்றாகும். ஒரு சமுதாயம் அறிவு வாய்ந்ததாக மாறும் போது அங்குள்ள தனிநபர் வளர்ச்சியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே தனிமனித வளர்ச்சி ஏற்படும் போது தான் ஒரு நாடு அதன் பேண்தகு அபிவிருத்தியை எட்டி விடுகின்றது என்பதற்கு மாற்றுக்கருத்தே இல்லை. ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் முதலில் அவர்களின் கல்வியையும் நூலகங்களையுமே அழிக்க வேண்டும் என்றே துணிவர்.

"தொட்டனை தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனை தூறும் அறிவு" என்கிறார் திருவள்ளுவர். அதாவது மண்ணை ஆழமாக தோண்டுகின்ற போது நல்ல நீரானது ஊற்றெடுப்பதைப் போல நல்ல நூல்களை ஒருவர் வாசிப்பதன் மூலம் அவர்களது அறிவு பெருகும் என்பது அதன் கருத்து. அதேபோல் குழந்தைகளிற்கும் சிறு வயது முதலே வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவது முக்கியமானதொன்றாகும். இன்றைய நவீன உலகின் அதிகரித்த தொழில்நுட்ப பயன்பாட்டால் நூல்களை வாசிக்கும் ஆர்வம் வெகுவாக குறைந்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் போது தான் பொது அறிவோடு மொழி அறிவையும் அதிகரித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் எமது காங்கேசன்துறை பொது நூலகம் விரைவில் தனது சொந்த கட்டடத்தில் அடுத்த காங்கேசன் முரசினை வெளியிட வேண்டும் என்றும்

ஒவ்வொரு வருடமும் இச் சஞ்சிகை காங்கேசன்துறை மண்ணை பறைசாற்றி மேலும் சிறப்பாக வெளிவர வேண்டும் என்று வாழ்த்தி, இச் சஞ்சிகை வெளியீட்டிற்கு பங்காற்றிய நூலகர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது நாட்டில் கடந்தகாலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் பின்னர் மீள்குடியேற்றம் இடம் பெற்று மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் மூன்று தசாப்தங்களின் பின்னர் இவ் வருடம் காங்கேசன்துறை மண்ணில் எமது காங்கேசன்துறை பொதுநூலகமும் மாணவர்கள், வாசகர்கள் மத்தியில் சிறப்பான சேவையை வழங்கி வரும் இவ்வேளையில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பலரது சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்து அவற்றை வெளிக்கொணர்ந்து ஏனையோரது சிந்தனைகளுக்கும் எடுத்துச் செல்லும் ஊடகமாக காங்கேசன் முரசு சஞ்சிகை வெளிவருகின்றமை சிறப்புக்குரியதொன்றாகும்.

நீரின்றி அமையாதது உலகு நல்நூல்கள் இன்றி அமையாதது அறிவார்ந்த உலகு. இதை உருவாக்குவதில் நூலகங்களின் பங்கு மகத்தானது. நூலகங்கள் அறிவின் மிகப் பெரிய தேடல் வெளி என்று கூறலாம். நல்ல நிலத்தில் பயிர்கள் செழித்து வளர்வது போல நல்ல நூல்களை நாம் தேடிப்படிக்கும் போது தான் நம் அறிவு மேலொங்கும். அதாவது நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்களே இல்லை. இதனாலேயே "வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்." எனலாம்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்." என்பதனை போல நூலகங்கள் இல்லாத ஊரும் பொலிவிழந்ததாகவே அறியப்படுகின்றது. ஒரு சமூகம் சிறந்து விளங்க வேண்டுமானால் கல்வியிலும் அறிவிலும் மேன்மை பொருந்திய பிரஜைகள் அங்கு வாழ்வதனால் தான் இது சாத்தியமாகின்றது. ஆகவே மக்களை மேன் மக்களாக மாற்றுவதில் இந்த நூலகங்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது. ஒரு சமூகத்தினுடைய அறிவு கருவூலங்கள் நூலகங்கள் என்றால் அது மிகையல்ல. ஒரு நூலகமே அந்த சமூகத்தை வழிநடத்தவும் நிலை நிறுத்தவும் ஆதாரமாய் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்ற பெரும் கடலை தனக்குள் தேக்கி வைத்துள்ள நூலகங்கள் தன்னை தேடிவரும் வாசகர்களின் அறிவு பசியினை போக்கி அவர்களை பூரணமான மனிதர்களாக சமூகத்திற்கு தருகின்றன. அதாவது பொறுமை, தேடல், ஆழமான வாசிப்பு, விவேகம், எழுத்தாற்றல், கேள்வி, ஞானம், படைப்பாற்றல் போன்ற உயர்ந்த திறன்களை இந்த நூலகங்கள் வழங்கும் பெருமை உடையன. பெருமைகள் பல மிகுந்த நூலகங்களை மனிதர்கள் சரியாக பாவிக்க வேண்டும். ஒவ்வொரு நாடுகளினுடைய பெருமையும் சிறப்பும் அந்த நாட்டு மக்களுடைய கல்வி அறிவிலேயே தங்கியுள்ளது. கல்வி அறிவு உயர்வதனால் அந்த நாடு சிறந்த வாழ்க்கை தரத்தை அடைந்து கொள்கின்றது.

மேலும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளி வரும் காங்கேசன் முரசு சிறப்பாக வாசகர்களுக்கு பயன்பெறும் வகையில் அமைய வேண்டும் எனவும் இச் சஞ்சிகை வெளியீட்டிற்கு வித்திட்ட அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.பகீரதன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**
**(கொல்லங்கலட்டி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அலுவலக பொறுப்பதிகாரியின் வாழ்த்துச் செய்தி

**"காங்கேசன் முரசே நீ முழங்கு"**



இலங்கைத் தீவில் வடமாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் அமைந்து அறியாமை எனும் இருளை அகற்றி பிரதேசத்திற்கு ஒளியூட்டுகின்ற காங்கேசன்துறைப் பொது நூலகத்தின் வாசிப்புமாத வெளியீடாக வரும் "காங்கேயன் முரசு 02" எனும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகின்றேன்.

கடந்த காலத்தில் மாணவர்கள் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் சிறந்த ஒரு நூலகமாக விளங்கிய எமது காங்கேசன்துறை பொது நூலகம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்வேறு இழப்புக்களை சந்தித்து தற்போது மீண்டும் தமது காங்கேசன்துறை பிரதேசத்திலேயே தற்காலிக கட்டடத்தில் அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது. இந்நூலகம் மீண்டும் வளர்ச்சி அடைந்து இப்பிரதேசத்தில் சிறந்த கல்விமான்களை உருவாக்கி ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

அருகிச் செல்லும் வாசிப்பு பழக்கத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மீளக்குடியமர்ந்த பிரதேசங்களின் மழுங்கடிக்கப்பட்ட கல்வியை மீண்டும் சீர்தூக்கி நிறுத்துவதற்கு இந்நூலகம் ஒரு மைல்க் கல்லாக விளங்குவதோடு தொடர்ந்து வரும் காலங்களிலும் பல அறிவுசார் கருத்துக்களை உள்ளடக்கிய நூல்களை வெளியிட்டு கல்விப்புலத்திற்கு சேவையாற்ற வாழ்த்துகிறேன்.

இம்மலர் உருவாக்கத்திற்கு குறுகிய காலத்தில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கிய காங்கேசன்துறை பொது நூலக நூலகர் மற்றும் உத்தியோகத்தர், உப அலுவலக உத்தியோகத்தர் ஊழியர்கள் அனைவரினதும் ஒத்துழைப்புக்களுக்கும் நன்றி நவில்வதோடு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நா. விஜேந்திரன்**
**பொறுப்பதிகாரி**
**வலி வடக்கு பிரதேசசபை**
**உப அலுவலகம் காங்கேசன்துறை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

புவியியல் ரீதியாக இலங்கைத் திரு நாட்டின் தலையாக விளங்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடல், வான், தரை, மார்க்கத்தின் வாசல் கதவாக விளங்கும் வட மாகாணத்தின் முதன்மைப் பிரதேசமான வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் தலைப்பட்டினமான காங்கேசன்துறையில் அமையப் பெற்றுள்ள காங்கேசன்துறைப் பொது நூலகம் காங்கேசன் மலரை வெளியிட்டுத் தொடர்ச்சியாக காங்கேயன் முரசு - 02 ஐ வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1990 ம் ஆண்டிற்கு முன்பு நாட்டின் நாலாத்திசைகளிலும் அறிவியல், அரங்கியல், அரசியலில் சிறப்புற்று விளங்கிய பலருக்கும் இவ் நூலகமே அறிவைக் கூர்மையாக்கிய பட்டறைக்களமாக விளங்கியது என்றால் மிகையாகாது.

நினைவுகளைத் திரும்பி பார்க்கின்றேன் இந்நூலகத்திற்கு அருகாமையில் மிகப்பெரிய தண்ணீர் கிணறு ஒன்று உள்ளது. இந்நூலகத்திற்கு அறிவுப் பசியை போக்க வருபவர்கள் பின்பு இக் கிணற்றிலிருந்து குடிநீரையும் எடுத்துச் செல்வது காணக்கூடியதாக இருக்கும்.

இன்றைய காலத்தில் ஜனரஞ்சகப் பொழுது போக்காகத் தொலைக்காட்சித் தொடர்கள் இருப்பது போல் அன்றைய காலத்தில் பொழுது போக்கு அம்சங்களாக சிறுகதை, நாவல்கள் செல்வாக்குச் செலுத்தியது. இதன் காரணமாக நூலகத்தில் படித்த பலர் தமது பிள்ளைகளுக்கு இக் கதைகளில் வரும் பெயர்களையே சூட்டினார்கள். காங்கேசன்துறை பட்டினசபை நிர்வாக அலுவலகத்தில் மக்கள் கூட்டம் குறைவாக இருந்தாலும் இப் பொது நூலகத்தில் எந்நேரமும் மக்கள் கூடி இருப்பார்கள்.

இவ்வாறு எமது வாழ்வியலோடு ஒன்றித்திருந்த இவ் நூலகம் 1990 ம் ஆண்டு இடப் பெயர்வுக்குப் பின்பு பல இன்னல்களுக்கும் தடைகளுக்கும் மத்தியிலும் மீண்டும் தனது சொந்த இடத்திற்கு திரும்பியுள்ளது. வெகு விரைவில் எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பார்வையினால் மீண்டும் தனது சொந்த கட்டிடத்திற்கு செல்லும் என்ற நம்பிக்கை கொள்கின்றேன்.

இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் இவ் நூலகத்தை தொடர்ந்து இயக்குவதில் அயராது பாடுபடும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கும் நூலகப் பொறுப்பாளருக்கும் எனது நன்றியை தெரிவித்து "காங்கேயன் மலர் - 02" மட்டுமல்லாது காங்கேயன் மலர் 2000 ம் காணும் என மனதார வாழ்த்துகின்றேன்.

**தலைவர்.க.ஞானேந்திரன்**
**காங்கேசன்துறை அபிவிருத்திச் சங்கம்**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



ஐந்து கரத்தினை ஆனை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களையும் மாவைக் கந்தனின் பாதார விந்தங்களையும் முதற்கண் பணிந்து வணங்கிக் கொண்டு

"என்னை இவ்வாறு இறைவன் படைத்தது
தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறு"

என்ற திருமூலரின் வாக்கிற்கு தலைவணங்கி 1976 ஆம் ஆண்டு காங்கேசன்துறைப் பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது. இந்த நூலகம் வாசகர் தொகை அதிகரித்ததால் நூலகம் மாடிக் கட்டமாக மாற்றி அமைக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட அசாதாரண நிலைமையால் பல்வேறு இடங்களில் பொதுநூலகம் தற்காலிக கட்டடங்களில் இயங்கி வந்தது. தற்போது 31 வருடங்களின் பின்னர் காங்கேசன்துறை மண்ணில் காங்கேசன்துறை பொதுமக்களிற்குச் சேவையாற்ற வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இந் நூலகத்தினால் தேசியவாசிப்பு மாதத்தினையொட்டி காங்கேசன் முரசு — 02 எனும் சிறப்பு மலரானது மாணவர்கள், அலுவலகர்கள், நூலக அங்கத்தவர்களாகியோரின் பல்வகை கவிதைகள், கட்டுரைகள், ஆக்கங்களினை உள்ளடக்கி வெளியிடப்படுவது சிறப்புடையதாகும்.

இம் மலரினை வெளியிடுவதற்கு வழிகாட்டிய அனைவருக்கும் அலுவலக வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்தவருமான பொறுப்பதிகாரி திரு.நா.விஜேந்திரன் அவர்களிற்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகள்.

இம்மலரிலே ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், மற்றும் கவிதை கட்டுரைகள் வழங்கிய இந்துமத குருமார்களிற்கும், தவிசாளரிற்கும், செயலாளரிற்கும், அறிஞர்களிற்கும், மாணவச் செல்வங்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அறிவிற்கு எட்டியவரை கருத்துக்களையும் வரலாறுகளையும் விபரித்துள்ளோம் இம் மலரிலே ஏதாவது குறைகள் இருந்தால் அறிவுசார் பெருமக்கள் அவற்றை மன்னித்து மீண்டும் அக்குறைகள் இல்லாது இம் மலர் போல் பல சிறப்பு மலர்கள் தோன்றுவதற்கு வழிசமைக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

இன்று ஒளிவீசிக்கொண்டிருக்கும் "காங்கேசன் முரசு" என்ற சிறப்பு மலர் தொடர்ந்து இனிவரும் வருடங்களிலும் வெளிவர வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**தொகுப்பாசிரியர்**
**திருமதி.விஜயலட்சுமி இரவீந்திரநாத்**
**நூலகர்,**
**பொதுநூலகம்**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசிப்போம்

வாசிப்பை நேசிப்போம்
சுவாசமாய் சுவாசிப்போம்
புத்தக பக்கங்கள் வாழ்வின் அங்கங்கள்
புத்தகம் சுமக்கும் மூளை
நாளை புத்தாக்கம் சுமக்கும்

வாசிப்பை நேசித்தால்
உலகத்தை நேசிப்பாய்
உலகம் உனை நேசிக்கும்
சுற்றி வரும் உலகின் அதிசயமாவாய்
உலகம் உன் வசப்படும்

இணையங்கள் வேண்டாம்
புத்தக இணைப்பில் இருங்கள்
இணைய பக்கங்கள் வேண்டாம்
புத்தக பக்கங்களுடன் இருங்கள்
புத்தகம் உங்கள் அகத்தை வளர்க்கும்

வாசகன் யாசகனாக வேண்டும்
நூல் நிலைய வாசல்களில்
கோவில் வாசல்களின் யாசகன்
வாசகனாக வேண்டும்
வாசிப்பு மனிதனை புனிதமாக்கும்

**ஆக்கம்**
**ச.வாகீசன்**
**தம்பகத்தம்பி வீதி,**
**குமாரகோவிலடி**
**காங்கேசன்துறை**
**J/236**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் வளர்ப்போம்

மரம் விடும் மூச்சுக் காற்றில் - தான்
நாம் வாழ்கின்றோம்
மரம் தரும் கூரையில் - தான்
நாம் இளைப்பாறுகின்றோம்
மரம் தரும் கனிகளையே
நாம் சுவைக்கின்றோம்
மரத்தின் மடியில் தான்
நாம் நிம்மதியாக உறங்குகின்றோம்
கற்பகதரு ஆன மரங்களை அழிக்காமல்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
அகிலத்தையே பசுமையாக்குவோம்
இயற்கையை நேசிப்போம்
இனிமையாக வாழ்வோம்

**தவேந்திரன் துதீபன்**

**தரம் - 04 யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பன் நூல்களே

- நாம் ஒரு புத்தகத்தை படிக்கும் பொழுது நமது கற்பனைத்திறன் வளர்கிறது.
- நாம் ஒரு புத்தகத்தை படிக்கும் பொழுது தனித்து இருக்கும் உணர்வை போக்கி ஒரு நண்பனுடன் உரையாடும் எண்ணத்தை உருவாக்குவதால் நல்ல நண்பன் நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- மேலும் புத்தகம் படிப்பதால் நல்லறிவு, நல்லொழுக்கம் என்பன வளரும்.
- ஒரு நல்ல புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமம் என்பார்கள்
- புத்தகங்களை வாசிப்பது அறிவை பெருக்குகிறது. மன அழுத்தத்தை குறைக்கிறது. மொழித்திறனை சீராக்குகிறது. நினைவுத்திறனை அதிகரிக்கிறது. எழுத்துத்திறனை மேம்படுத்துகிறது.
- மேலும் இலக்கியம் சார்ந்த புத்தகங்களை வாசிப்பது தான் பொதுவான கருத்து என்று நிலவுகிறது. ஆனால் உண்மையில் அவை எந்தத்துறை சார்ந்தும் இருக்கலாம். பல் தரப்பட்ட பன்முகப் புத்தகங்களை வாசிப்பது தான் ஒரு நல்ல வாசிப்பாளனை உருவாக்கும்.
- நாளும் பொழுதும் என்னோடு நாவாடிக் கொண்டிருக்கிற என்னை எப்போதும் வீழ்த்திடாத நண்பர்கள் புத்தகங்களே.
- உலகத்தின் அனைத்து நாடுகளும் புத்தகத்தினால் ஆளப்படுகின்றன. என்பதற்கு ஈடு இணை எதுவும் இல்லை.
- பொன்னள்ளி தந்தாலும் தருவேன் அன்றி புத்தகத்தை நான் இரவல் தரவே மாட்டேன்.
- நூல்களை விட சிறந்த நண்பர்கள் உலகத்திலேயே இல்லை ஆகையினால் நல்ல நண்பர்கள் நூல்களே என்ற கருப்பொருளை மனதில் கொண்டு வாழ்வில் உயர்வோம்.

நன்றி

**செல்வன் க.சாந்தனு**

**தரம் - 04**

**யா/தையிட்டி கணேச வித்தியாசாலை**

**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா

சொல்லாமல் வந்து நில்லாமல் பரவி
உல்லாசமாக உலகை உலாவரும் கொரோனாவே
கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர் உனை எதிர்த்து
உலகமே போர்க்களமானது விந்தையான போர் என்றாலும்

நம்பிக்கை உயிரோட்டமானது.
நித்தம் சுத்தம் பேண
கழுவிய கரங்கள் கொண்டு
அச்சம் தவிர்த்து எச்சரிக்கை தவறாது
உள்ளத்தால் இணைந்து விரட்டுவோம் உன்னை.

**சசிகுமார் அனிஸ்ரன்**
**தரம் -05**
**யா/வீமன்காமம் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார பணியாளர்களின் அர்ப்பணிப்புக்கள் (ஒரு சமூகப் பார்வை)

இன்றைய காலகட்டத்தில் சுகாதார பணியாளர்களின் சேவை முக்கியம் பெற்று விளங்குகின்றது. இவர்களது சேவை முக்கியமாக பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். உலகத்தினையே புரட்டிப்போட்ட இந்த கொடிய கொரோனா நோய்க் காலகட்டத்தின் போதும் தமது பாதுகாப்பினையும் கருத்தில் கொள்ளாது எமக்காக சேவை புரிந்து வருகின்றனர். நாம் அனைவரும் வீட்டில் முடங்கியிருந்த ஊரடங்கு காலத்தில் கூட அவர்கள் ஓய்வின்றி தமது சேவையை புரிந்து கொண்டிருந்தனர். தமது பாதுகாப்பினை விடவும் எமது பாதுகாப்பே முக்கியம் என கருதி பெரும்பாடு பட்டு வருகின்றனர். எமக்காக இவர்கள் இலவச P.C.R பரிசோதனை செய்தல், கொரோனா தடுப்பூசி போடுதல், தனிமைப்படுத்தல் ஆகியவற்றை செவ்வனே செய்து வருகின்றனர். அவர்களது சேவைகள் ஈடற்றவையாகக் காணப்படுகின்றன.

இவை மட்டுமன்றி டெங்கு நோய் தடுப்புப் பரிசோதனை, பாடசாலை மாணவர்களின் உடல் உள நல பரிசோதனை, பாடசாலைச் சூழல் பரிசோதனை போன்றவற்றினையும் மேற்கொண்டு வருகின்றனர். இதைவிடவும் ஊர் ஊராக சென்று கொரோனா விழிப்புணர்வை மெற்கொண்டு வருகின்றனர். இவர்களின் இப் பெரும் சேவையினை கருத்தினில் கொண்டு மக்கள் சுகாதாரப் பணியாளர்கள் மீது பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சில மக்கள் இவர்களின் சேவையினை துச்சமாக கருதுகின்றனர். முப்படையினர் ஆயுதம் ஏந்திய பலசாலிகளாக காணப்படலாம். ஆனால் இந்த சுகாதாரப் பணியாளர்கள் ஆயுதம் ஏந்தாத பல சாலிகளாக காணப்படுகின்றனர். இவர்களது இந்த அளப் பெரிய சேவையினை கருத்தில் கொண்டே ஒவ்வொரு வருடமும் சுகாதார தினமாக ஒரு வாரத்தை தெரிவு செய்து எமது பாடசாலைகளில் சிரமதானம், டெங்கு, எயிட்ஸ் தொற்று நோய் விழிப்புணர்வு போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றோம். என்பதை கூறுவதினால் பெருமை அடைகின்றோம். எமது நாடான இலங்கை கொரோனாத் தொற்று சிவப்பு வலயத்திலிருந்து மீண்டு வருவதற்கு முக்கிய காரணமாக எம் நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ காணப்படவில்லை. இந்த சுகாதார பணியாளர்களே காணப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர்கள், தாதியர்கள், நோயாளர்காவு வண்டி சாரதிகள், சுகாதார பரிசோதகர், சுகாதார சேவையாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்வதில் நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இவர்களது சேவை மென்மேலும் இந்நாட்டிற்கு தேவை.

தி.நமிதா
தரம் - 11
யா/நடேஸ்வரக் கல்லூரி
காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் - 19

கொடிய உயிர்கொல்லி கொரோனா
எளிதில் தொற்றிவிடும் கொரோனா
நுரையீரலை பாதிக்கும் கொரோனா
கண்ணுக்குத் தெரியாமல் தாவுகின்ற கொரோனா

கர்ப்பிணிப் பெண்களை நடுங்க வைத்த கொரோனா
மனித உயிர்களை அழிக்க வந்த கொரோனா
நாட்டுக்கு நாடு நடமாடும் கொரோனா
நாட்டையே திணற வைத்த கொரோனா

செல்வர் ஏழையென்று பார்க்காத கொரோனா
செல்வத்தை அழிக்க வந்த கொரோனா
மருத்துவர்களை கடவுள் என்று நினைக்க வைத்த கொரோனா
செவிலியர்களை உயிர்க்கவசம் அணிய வைத்த கொரொனா

கடைகளை மூட வைத்தாய்
மனிதர்கள் நடமாட மறுத்தாய்
முகக்கவசம் அணிய வைத்தாய்
குழந்தைகளின் கல்வியை சீரழித்தாய்

உனக்கு ஆக்ஸியன் தேவையா?
மனித உயிர்களும் தேவையா?
உலகத்தை விட்டு ஓடி விடு
மக்களை மகிழ்ச்சியாய் வாழவிடு.

நன்றி.................

ஞா. செல்வமதி
தரம் - 07
யா/நடேஸ்வரக் கல்லூரி
காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழிக்கல்வியும் மாணவர்களும்

நாம் காலடி எடுத்து வைத்திருக்கின்ற தற்போதைய இருபத்தொராம் நூற்றாண்டில் அறிவியலின் தாக்கமானது உலகமக்கள் அனைவரிடத்திலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படுத்தப்படும் தாக்கம் அனுகூலமானதாகவும் பிரதிகூலமானதாகவும் காணப்படுகின்றது. இந்த வகையில் பள்ளி மாணவர்களிடையே பல மடங்கு அதிக தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தொழினுட்பத்தின் வளர்ச்சியினால் இணையவழி மூலம் நடைபெற்று வருகின்றது. இத்தாக்கம் அனுகூலமானதானது என்றே அச்சாணியாகக் கூறமுடியும். என்னதான் அனுகூலமான தாக்கம் மாணவர்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதேநேரம் இளைஞர்களிடையே அதிகளவில் பிரதிகூலமான தாக்கத்தை இவ் தொழினுட்பம் ஏற்படுத்துகிறது. எனவே நாம் அடுத்து வரும் பந்திகளில் இணையவழிக் கல்வி என்றால் என்ன என்பதனையும் இணையவழிக் கல்வியின் பயனையும் இணையவழிக் கல்வியினை வளர்ப்பதற்கு முன்னெடுக்கக் கூடிய ஆயத்தங்கள் எவை என்பது பற்றியும் என்னுடன் சேர்ந்து நீங்களும் சற்று சிந்தித்துப்பாருங்கள்.

இணையவழிக்கல்வி என்பது "பரந்துபட்ட உலகில் எப்பாகத்திலிருந்தும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை முன்னெடுக்கும் நோக்கில் ஆசிரியர்களினால் நடாத்தப்படும் மெய்நிகர் கற்றல் ஆகும்." இக் கற்றலை நடாத்துவதற்காக இன்று பல ஊடக வழிமுறைகள் தோற்றுவிக்கப்பட்டது. உதாரணமாக நேரலையாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஒளிபரப்பப்படுதல் இக் கல்வி முறையானது நம் ஈழத்தில் கொரோனா தொற்று காலத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கால விடுமுறை தினத்தை சிறப்பாக முன்னெடுக்க இவ் இணையவழிக்கற்றல் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கல்வியானது அங்கீகரிக்கப்பட்ட கற்றல் ஆகும்.

இணையவழிக் கல்வியானது நடைபெறும் ஊடகங்களுக்கு உதாரணமாக கைத்தொலைபேசி, மடிக்கணினி (Online) வானொலி, தொலைக்காட்சி ( Smart TV) போன்ற பலவற்றைக் குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் தொலைபேசி அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் தொலைபேசிப் பாவனையே இன்று அதிகளவில் அனைவரது பயன்பாட்டிலுள்ளது. அத்தோடு தொலைபேசியில் காணப்படும் சக ஊடகங்களான முகநூல், You - Tube போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இக் கல்வியானது ஆரம்பப் பிரிவு தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரைக்கும் நடைபெற்று வருகிறது.

இவ் இணையவழிக் கல்வியினால் மாணவர்களின் கல்வியானது உயர்மட்டத்தை அடைந்துள்ளது. அதுமட்டுமல்லாது எந்நேரத்திலும் அவர்களது கல்வி நடவடிக்கையினை முன்னெடுக்க முடிகிறது. மாணவர்களிடையே தொழில்நுட்ப அறிவு விருத்தி அடைந்துள்ளது. அத்தோடு புதிய ஊடகங்களை பயன்படுத்தும் ஆற்றல் சிறப்பாக காணப்படுகிறது. ஆங்கிலக் கல்வியறிவும் விருத்தியடைந்துள்ளது. இப்படிப்பட்ட ஈடு இணையில்லா கல்வியினை பயில்நிலையில் கொண்டுவந்த ஆரம்பத்தில் நான் மட்டுமல்லாது பல சாதாரண மக்களது கற்றல் சிறிதளவில் இடராக இருந்தது. ஏனெனில் ஆசிரியர்களின் கற்பித்தலின் போது அவர்களது குரல் வெளிப்பாடுகளை புரிந்து கொள்வதில் கடினம் ஏற்படுகிறது. சமிக்ஞை பிரச்சினையால் கற்றலின் ஒரு மணித்தியால நேரத்தில் அரைமணித்தியால விடயத்தினை புரிந்து கொள்ள முடிகிறது. இதுவே இணையவழிக் கல்வியின் இடர் என்று கூறமுடியும்.

இணையவழிக் கல்வியில் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் அல்லது பிரதிகூலமாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும் தொலைபேசியினை இணையவழிக் கல்விக்கு மட்டும் பயன்படுத்தாது அதனை வேறு தீய வழிகளுக்காக பயன்படுத்த தூண்டப்படுதல், மாணவர்களின் சிந்தனைகள் தீயதன் பக்கம் திசைதிரும்புதல், கண் பார்வை சிறிதளவு குன்றுதல், செவிப்புல தொடர்பாடலை மேற்கொள்வதில் இடர்பாடுகள் ஏற்படுதல் போன்றவற்றைக் கூற முடியும்.

இவ்வாறு பல விதங்களில் நாம் இணையவழிக் கல்வியினை பெற்றுக்கொள்வதால் அது நமக்கு பல்வேறு பயனைப் பெற்றுத்தருகிறது. எனவே இவ் இணையவழிக் கற்றலினை நம் இளைய சமுதாயம் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள நாம் அவர்களை வழிப்படுத்தும் நிகழ்வாக மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியினை பயிற்றுவித்தல், தொழினுட்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினை வளப்படுத்த மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குதல், இணையவழிக் கல்வியினை பெற்றுக்கொள்வதற்காக மாணவர்களுக்கு இலவசமாக தொலைபேசியினை அல்லது மடிக்கணினியை வழங்குதல் போன்ற பல செயற்பாடுகளை நடாத்த முடியும். எனவே நல்வாழ்வினை மாணவர்கள் நல்ல முறையில் முன்னெடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இடர்கால இணையவழிக் கல்வியானது இனிவரும் சமுதாயத்திற்கும் நல்வழியில் வித்திடும்.

"இணையம் ஒரு நூலகம்
அது அறிவைப் பெருக்கும்
இது மாணவர்களின் கல்விக்கூடம்"

"இனி ஒரு விதி செய்வோம் இணையக்கல்வியை மேம்படுத்துவோம்!"

**சி.வானுப்பிரியா**
**தரம் - 12**
**யா/நடேஸ்வரக் கல்லூரி**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக அங்கத்தவர்கள் ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுக்கப்பட்ட வாசிப்பும், முடக்கப்பட்ட சமூகமும்

"அடுப்பங்கரை தொடக்கம் அண்டவெளி வரை தொழில்நுட்பம் தனது ஆதிக்கத்தை செலுத்தி வரும் மிலேனிய யுகத்தின் மின்மினிகளான நாம் அனைவருமே நாகரிகம் என்ற போர்வையை போர்த்தி, பழையதை ஒதுக்கி புதியதை வரவேற்கும் மடத்தன்மைக்கு பழக்கப்பட்டு வருகிறோம். அதிலும் குறிப்பாக தற்காலத்தில் நூலகம் சென்று புத்தகமொன்றை படிப்பது நாகரிகம் இல்லை என்ற ரீதியிலும் தொலைபேசியில் தேவையற்ற விடயங்களில் வீண்பொழுதை கழிப்பதே நாகரிகம் என்ற விசித்திர சிந்தனை இன்றைய இளம் சமுதாயத்தின் மனங்களில் வேரூன்றிவிட்டது.

"எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு பல சிறைச்சாலைகள் மூடப்படுகிறது" என்பது நூற்றுக்கு நூறு வீதம் உண்மைத்தன்மை நிறைந்தது. வாசிப்பு பழக்கம் என்பது எமது மன உளைச்சல்களை நீக்கி மனநிம்மதியை தருகின்றது என்றால் அதில் துளியளவேனும் ஐயமில்லை. வாசிப்பின் முக்கியத்துவத்தை எத்தனையாயிரம் வழிகளில் எமது சமுதாயத்தை போய்சேரும் வண்ணம் விதைத்தாலும் கூட அதில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரே வாசிப்பின் மகத்துவத்தை உணர்ந்து அதன் மூலம் பயன்களை பெற்றுக்கொள்கின்றனர். இது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமேயாகும்.

" நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்ற ஔவையாரின் கூற்றானது நாம் எந்தளவுக்கு அதிகமாக நூல்களை வாசித்து அதன் மூலம் புதிய பல தகவல்களை, விடயங்களை பெற்றுக்கொள்கிறோமோ, அந்தளவுக்கு அறிவுபூர்வமான மனிதர்களாக திகழுவோம் என்பதை தெளிவுபடுத்துகிறது. அதுமட்டுமன்றி வாழ்க்கையில் சாதித்த எத்தனையோ புத்தி ஜீவிகள் வாசிப்பினதும், நூல்களதும் மகத்துவத்தையும், முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்தவகையிலே, மனிதனின் ஆகச் சிறந்த கண்டுபிடிப்பு எதுவென ஆல்பர்ட் ஐன்ஸ்டீனிடம் விசாரித்த போது சிறிதும் யோசிக்காமல் "புத்தகம்" என்று பதிலளித்தார். அது மட்டுமன்றி ஒரு அறிவு ஜீவியை சந்திக்க நேர்ந்தால் அவரிடம் நீங்கள் எந்தெந்த வகையான புத்தகங்களை வாசிக்கிறீர்கள் என்று நீங்கள் கேட்க வேண்டும். என்று அறிஞர் ரெல்ப் வால்டோ எமர்சன் கூறியிருந்தார். இவை எடுத்துக்காட்டாக கூறப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில விடயங்களாகும். இவற்றையெல்லாம் தவிர எத்தனையாயிரம் அறிஞர்கள், ஜாம்பவான்கள் வாசிப்பின் மகத்துவத்தை கூறியுள்ளனர்.

" ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் ஒரு சிறந்த எழுத்தாளன்" என்று கூறுவார்கள். வாசிப்பு என்பது நாம் நினைக்கும் அளவுக்கு கசப்பான விடயமல்ல அது எமக்கு பல அனுபவங்களை தருகின்றது. எந்தளவுக்கு அதிக அதிகமாக புத்தகத்தை வாசிக்கின்றோமோ அந்தளவுக்கு சமூகத்தில் எமக்கான ஒரு அந்தஸ்தும் வளர்ந்து கொண்டே செல்லும். அதாவது ":புத்தகங்கள் தான் சமுதாய மாற்றத்துக்கான சாவி" எம்மைச் சுற்றியுள்ள சமூகத்தை ஒரு தடவை உற்றுப் பாருங்கள். அதிலே மனிதர்கள் ஒவ்வொருவரிடையேயும் எத்தனையோ பல விதங்களில் வேறுபாடுகள் காணப்படும். அதிலும் படித்தவர்களுக்கிடையிலும், படிக்காதவர்களுக்கிடையிலும் காணப்படும் வேறுபாடானது அவரவர் சமூக அந்தஸ்தை தீர்மானிக்குமளவிற்கு ஆதிக்கம் செலுத்துகிறது. இவற்றின் மூலமே எமது வாழ்க்கையில் புத்தகங்களும், வாசிப்புக்களும் எந்தளவுக்கு தாக்கம் செலுத்தி வருகிறது என்பதை கண்கூடாக காணமுடிகின்றது.

உலகெங்கிலும் இன்று வாசிப்புப் பழக்கமானது குறைந்து கொண்டே வருகின்றது. இன்றைய இளம் சமுதாயம் இணையத்திற்கு அடிமையாகிவிட்டது. வீடுகளில் தொலைபேசி பாவிப்பது தொடர்பாக இருந்த கட்டுப்பாடுகளையும் இந்த கொரோனா வைரஸ் முற்று முழுதாக நீக்கி மாணவர்கள் தொலைபேசிக்கு இரையாவதற்கு வழிசமைத்து விட்டது. ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கே சொந்தமாக தொலைபேசி வாங்கி கொடுக்குமளவுக்கு சமூகம் மாற்றமடைந்து விட்டது. ஏனெனில் கல்வி நடவடிக்கைகள் யாவுமே தொலைபேசியில் தானே நடைபெறுகிறது. இதன் காரணமாக இன்றைய தலைமுறையினரிடம் வாசிப்பு பழக்கம் முற்று முழுதாக அற்றுப்போய் விட்டது.

உலகின் ஜாம்பவான் என்று மார்தட்டும் அமெரிக்காவில் உயர் கல்வி கற்போரில் சரியாக பாதிப்பேர் வாசிக்க முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். அதேபோல இந்தியா தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் உச்சத்தில் உள்ள நாடு இங்கு சுமார் 35 வீதமானோர் எழுத்தறிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவற்றையெல்லாம் நோக்கும் போது வாசிப்பு பழக்கம் உலகளவில் எந்தளவில் உள்ளது என்பதை எம்மால் இலகுவாக உணர முடிகின்றது. இவை மாற்றப்பட வேண்டும். இந்த நிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் மாற்றமானது நிச்சயம் சமுதாயத்தை சீரான பாதையில் இட்டுச் செல்லும்.

இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணரவைத்து வாசிப்பின் மீது தீராக் காதலை ஏற்படுத்த வேண்டும். எம்மையும், எம் சமுதாயத்தையும் நல் வழிப்படுத்துவதற்கு இதுவே சிறந்த வழி என்பதை உணர வைக்க வேண்டும். தற்காலத்தில் இணையங்களில் எத்தனையோ பல விடயங்கள் உலா வருகின்றன. அவற்றில் நல்லதை விட சமூகத்தை சீரழிப்பவையே அதிகமானவை என்றால் மிகையாகாது.

மாணவர்களின் கல்விக்காக என தொலைபேசியை கொடுக்கும் பெற்றோர் அவர்களிடம் வகுப்புக்கள் நிறைவடைந்ததும் தொலைபேசியை அவர்களிடம் இருந்து வாங்கி விட வேண்டும். அவ்வாறாயின் அவர்கள் இணையத்திற்கு அடிமையாவதை தடுக்க முடியும். பொழுதுபோகவில்லை என்றால் ஒரு புத்தகத்தை வாசிக்க கொடுங்கள் அவர்கள் அறிவு வளரட்டும். இவ்வாறான சிறிய சிறிய மாற்றங்கள் நிச்சயம் வாசிப்பு மீது தீரா தாகத்தை ஏற்படுத்தும். வருடந்தோறும் வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் நூலகங்களிலும், பாடசாலைகளிலும் "இந்த மாதம் வாசிப்பு மாதம்" எனவும் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி பல பதாதைகள் தொங்க விடப்படும். முதலில் அதை மாற்ற வேண்டும். அவற்றை வருடம் முழுவதும் தொங்க விட வேண்டும். அந்த ஒரு மாதத்தில் மாத்திரம் வாசிப்பின் அருமையை உணர்த்தி பயனில்லை. வருடம் முழுவதும் இவை நிகழ வேண்டும்.

"போதைக்கு அடிமையாகி கலாசாரத்தை சீரழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் இன்றைய தலைமுறை வாசிப்பு பழக்கத்திற்கு அடிமையாகி புத்தகங்கள் மீது காதல் கொண்டு முடங்கிப் போயுள்ள சமுதாயத்தை மீட்டெடுக்க வேண்டும்.

**புஸ்பராசா கோபிகா,**
**தையிட்டி, காங்கேசன்துறை.**
**யாழ் பல்கலைக்கழக மாணவி**
**2ம் வருடம் (கலைப்பீடம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் வளத்தை பாதுகாக்கும் சேதன விவசாயம்.

முதலில் நான் சேதன விவசாயம் என்றால் என்ன? என்ற விளக்கத்தை தரவேண்டும் என கருதுகிறேன். இந்தவகையில் சேதன விவசாயத்தை ஆங்கிலத்தில் "Organic Farming" என அழைப்பர். இவ் சேதன விவசாயம் என்பது விவசாய பண்ணையை உயிருள்ள ஒரு தொகுதியாக கருதி, சூழலுடன் இசைவான முறையில், இயற்கையாக கிடைக்கும் உள்ளீடுகளை பயன்படுத்தி, பொருளாதார ரீதியில் பயனளிக்;கக்கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதை நோக்கமாக கொண்ட ஒன்றிணைந்த விவசாய முறையாகும். இங்கு கால்நடை மற்றும் பயிர்ச்செய்கை இணைந்து காணப்படும்.

இவ்விவசாய முறையின் அடிப்படை தத்துவமானது, பண்ணையில் ஆரோக்கியமானதும் உயிர்வாழ்கின்றதுமான மண்ணை உருவாக்குவதன் மூலம் ஆரோக்கியமான பயிர்களை உற்பத்தி செய்வதாகும்.

இவ் விவசாய முறையானது 1960 ஆம் ஆண்டுகளிலிருந்து விசேட கவனத்தை ஈர்த்தது. இவ் விவசாயத்தை முன் கொண்டுவருவதற்கு காரணம் என்னவென்று பார்க்கும் போது இயந்திரமயமாக்கப்பட்டதும் கிருமிநாசினிச் சேர்வைகள் உணவில் தேக்கமடைந்ததனால் பல சுகாதார பிரச்சனைகளுக்கு காரணமாய் அமைந்ததும், உயிரங்கிகளும் அவற்றின் இருப்பிடங்களும் அழிவடைந்தமையும் சூழல் மாசடைந்தமையுமாகும். இதனால் மண்,சூழல், பொருளாதாரம் என்பன வலுவிழந்து போவதில் இருந்து தப்பிக்கும் செயற்பாடாகவே இவ் விவசாயம் காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மண்வளத்தை பாதுகாக்கும் பொருட்டு 2008 ஆம் வருடத்தில் சேதனப் பசளை உற்பத்தியையும், பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்னிருத்தியது.

இவ்வாறு மண்வளத்தை பாதுகாத்து இயற்கைச் சமநிலையை பேணியவாறு சேதன விவசாயத்தை மேற்கொள்வதற்கு ஏற்கனவே இருந்த விவசாய முறையில் சில நடைமுறைகளை நிராகரிக்கிறார்கள். அவை எவை என பார்ப்போம்.

- செயற்கையான நஞ்சூட்டப்பட்ட பீடை நாசினிப் பாவனை
- செயற்கையான இரசாயனப் பசளைகள்
- செயற்கையான வளர்ச்சி ஹோர்மோன்கள்
- செயற்கையான உணவுகளை உட்கொண்ட விலங்குகளின் கழிவுகள் போன்றனவாகும். இவ் செயற்கையை விலத்தி விட்டு இதற்கு ஈடாக இயற்கை/சேதத்தை முன்வைக்கின்றனர்.

மேலும் இவ் சேதன விவசாய முறையில் மேற்கொள்ளப்படும் சில முக்கியமான நடைமுறைகளைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பயிர்வகைகளை மாற்றி மாற்றி நடல்; (சுழற்சி முறை பயிர்ச்செய்கை)
- விலங்கு, கால்நடை உரப்பாவனை
- கூட்டெருப் பாவனை
- இலைப்பசளை பாவனை (பசுந்தாற் பசளை)
- அவரை இனப் பயிர்களை வளர்த்தல்
- பல்லின பயிர்களை வளர்த்தல்
- உயிரியல் முறையில் பீடைகளை கட்டுப்படுத்தல்
- இயந்திரங்கள் மூலம் களைகளை கட்டுப்படுத்தல் என்பனவாகும்.

மேலும் இவ் சேதன விவசாயத்தில் முக்கியமாக பீடைக்கட்டுப்பாடு, களைக்கட்டுப்பாடு காணப்படும். அவற்றையும் இயற்கை முறையில் மேற்கொள்வது சிறப்பானது. அந்தவகையில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர் என்பதை அவதானிப்போம்.

### சேதன விவசாயப் பண்ணையில் பீடைகளின் கட்டுப்பாடு

சேதன விவசாயப் பண்ணையின் அடிப்படைத் தத்துவமானது தாவரங்களுக்கு உயர் போசணையை பெற்றுக்கொடுத்து அதன்மூலம் தாவரங்களின் வீரியமான வளர்ச்சிக்கு உதவுவதன்மூலம் பீடைகளினால் ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாப்பதாகும். இம்முறையில் மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகளாவன:

- பாதுகாப்பு பயிர்களை நடல்
- தொடர்ச்சியாக பயிர்களை மாற்றுதல்
- பல்வின (mixed crops) பயிர்செய்கையை மேற்கொள்ளல்
- பல் வகையான மண் உயிரினங்களை பாதுகாப்பதோடு சூழலுக்கு நன்மைபயக்கும் பூச்சிகளினதும் பறவைகளினதும் உதவியினால் பீடைகளை ஒழித்தல்
- பீடை கட்டுப்பாட்டு முறை தோல்வியடையும் போது இரைகவ்விகளின் பாவனை மூலம் அவை பரம்பலடைவதை தடுத்தல், பொறி அல்லது தடைகளை பாவித்தல்
- இவ்வனைத்து முறைகளின் மூலமாகவும் கட்டுப்படுத்த முடியாமல் போகும்போது மாத்திரம் இயற்கையான அல்லது சேதன பீடை நாசினிகளை (வேப்பம் விதை, புகையிலை, காஞ்சோந்தி, இஞ்சி, மிளகாய், மிளகு, வெள்ளைப்பூடு போன்றவற்றில் இருந்து தயாரித்த திராவகங்களை) பயன்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேதன விவசாயப் பண்ணையில் களைகளின் கட்டுப்பாடு பற்றி பார்ப்போம்.

களை என்பது" நாம் விரும்பி வளர்க்கப்படுகின்றன பயிர்கள் தவிர்ந்த ஏனைய பயிர்கள் "எனப்படும்.

இக் களைகளை சேதன விவசாய முறையில் முற்றுமுழுதாக பண்ணையில் இருந்து அகற்றாது அவற்றை கட்டுப்படுத்துவதே பிரதான நோக்கமாகும். களைகளை கட்டுப்படுத்தல் என்பது பயிர்களின் வளர்சியிலும், விளைச்சலிலும் களைகளின் பாதிப்பால் ஏற்படும் தாக்கத்தினை குறைப்பதாகும்.சேதன விவசாய முறையில் செயற்கை களை நாசினிகளின் பயன்பாடு தவிர்கப்படவேண்டும். இதற்கான காரணம் களைநாசினிகளும் பீடை நாசினிகள் போன்று சூழலுக்கு தீங்கை விளைவிக்கக் கூடியன. சூழலுக்கு நன்மை பயக்கும் பூச்சி இனங்களுக்கு புகலிடம் அளிக்கும் தாவரங்களும் களை நாசினிகளின் பாவனையால் அழிக்கப்படலாம். பின்வரும் செயற்பாடுகள் மூலம் சேதன விவசாய முறையில் களைகள் மட்டுப்படுத்தப்படலாம்.

- சுழற்சிமுறை பயிர்ச்செய்கை
- களைகளை கையால் அல்லது இயந்திரங்களின் உதவியால் அகற்றுதல்
- மூடுபயிர்களை வளர்த்தல்
- பயிர்களை நெருக்கமாக நடல்
- மூடுபடைகளை பயன்படுத்தல்
- காலத்திற்கு காலம் மண்ணை கிளறிவிடல்
- சேதன விவசாய முறையில் மூடுபடை மூலம் களை கட்டுப்பாடு

இயற்கையான கட்டுப்பாட்டு முறைகளும் காணப்படுகின்றன.அவை பற்றி பார்ப்போம்.

சேதன விவசாய முறையில் பல்வேறு வழிகளில் இயற்கையாக நோய்களும் பீடைகளும் கட:டுப்படுத்தப் படலாம்.

வீரியமான பயிர்கள் நோய்களாலும் பீடைகளாலும் மிகக்குறைவாகவே பாதிக்கப்படும்

குறிப்பிட்ட நோய்களுக்கும் பீடைகளுக்கும் இயற்கையாகவே எதிர்ப்பு சக்தி கொண்ட பயிரினங்களை தெரிவு செய்து நடல். உள்ளூர் இனப் பயிர்கள் பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தப்பட்ட இனங்களைவிட நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கொண்டதாகும்.

உரிய காலத்தில் பயிர்களை நடுவதன் மூலம் பீடைகள் அதிகம் தாக்கும் காலத்தை தவிர்த்து கொள்ளலாம்

பீடைகள் அதிகம் விரும்பாத ஏனைய தோழமைப் பயிர்களுடன் (உதாரணமாக வெங்காயம், வெள்ளைப் பூடு) கலந்து நடல்

பொறிகளை பயன்படுத்தி அல்லது கைகளால் பீடைகளை அகற்றுதல்

நோய்களையும் பீடைகளையும் சரியான முறையில் அடையாளம் காணல். இது விவசாயின் நேரத்தை மீதப்படுத்துவதோடு தவறுதலாக நன்மை பயக்கும் பூச்சியினங்களை அழிப்பதையும் தவிர்க்க உதவும்.

சுழற்சிமுறை பயிர்செய்கை மூலம் பீடைகளின் வளர்ச்சி வட்டத்தை தகர்பதோடு பீடைகள் அடுத்த போக பயிருக்கு பரவுவதையும் தவிர்க்கலாம்.

பண்ணையை சுற்றி பீடைகளை பிடித்து உண்ணும் இயற்கை இரைகௌவிகளுக்கான வாழ்விடங்களை உருவாக்குவதன் மூலம் பீடைகளின் தாக்கத்தை மட்டுப்படுத்தலாம்.

தத்துக்கிளி, நத்தை, கறையான், ஏபிட்டுக்கள், கம்பளிப்பூச்சி வர்க்கங்கள் என்பன பீடைகளிற் சிலவாகும். லேடி பேர்ட், சிலந்தி, நில வண்டுகள், ஓட்டுண்ணிக் குழவிகள், கும்பிடுதட்டான் என்பன சில இரைகௌவிகளாகும்.

கவனமான திட்டமிடலுடன், கிடைக்கப்பெறும் சகல தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களுக்கு கிருமிநாசினிகள் விசிறுவதை தவிர்கலாம். இதற்கும் மேலாக பீடைகளின் தொல்லைகள் அதிகரிக்கும் போது மாத்திரம் இயற்கையான பீடைநாசினி தன்மை கொண்ட பொருட்களில் (மிளகாய், வெங்காயம், வெள்ளைப்பூடு, வேப்பம் விதை) இருந்து தயாரித்த தெளிகரைசல்களை பயன்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட இயற்கையான தெளிகரைசல்களைக்கூட தேவைக்கு மேலதிகமாக பயன்படுத்துதல் கூடாது.

## சேதன விவசாயிகள் கருத்திற் கொள்ளவேண்டியவை

பல்லினப் பயிர்களை கொண்ட பண்னைகளை நடைமுறைப் படுத்தவேண்டும் (கலப்பின பயிர்ச்செய்கை, ஊடுபயிரிடல்,நிரைகளில் பயிரிடல்)

ஒரே இனப்பயிரில் பல்வேறு வர்க்கங்களை பயிரிடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்றளவு உள்ளூர் வர்க்கங்களை பயிரிடல்

உள்ளூர் மற்றும் தரமுயர்ந்த பயிரினங்களின் விதைகளை சேமித்து வைத்து பயன்படுத்துவதன் மூலம் வெளியில் இருந்து வருடம்தோறும் விதைகள் வாங்குவதை தவிர்க்கலாம்.

விவசாயிகள் தமக்கிடையே விதை இனங்களை மாற்றீடு செய்வதன் மூலம் பண்ணைகளில் பயிர் பல்வகைத்தன்மையை கூட்டலாம். இதன்மூலம் பாரம்பரிய பயிரினங்கள் அருகிப்போவதையும் தவிர்கலாம்.

இதோடு சேதன விவசாயத்தில் கால்நடையும் வளர்க்கப்படும். கால்நடை கழிவுகள்,பயிர் மீதிகள் பயிருக்கு பசளையாக இடப்படுகிறது. இவ் பசளைகளும் பல்வேறு நன்மைகளையே பயிருக்கும் மண்ணுக்கும் அளிக்கிறது.

சேதன விவசாயத்தின் பிரதான கொள்கைகளாக சிலவற்றை நோக்கலாம்.

உற்பத்தி செய்யப்படும் உணவானது போஷணை மட்டத்தில் உயர்வானதாக இருப்பதோடு போதியளவு உற்பத்தி செய்யப்படவும் வேண்டும்.

அனைத்து இயற்கையான செயற்பாடுகள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் தாவர, விலங்கு மண்ணிலுள்ள நுண்ணங்கிகள் என்பவற்றுடன் மண்ணின் வளத்தையும் அதிகரிக்க செய்ய வேண்டும்.

மண்ணின் வளத்தன்மையை நீண்ட காலத்திற்கு பேண வேண்டும்.

இயலுமானளவு மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடியதும் பிரிந்தழியக்கூடியதுமான பொருட்களை பயன்படுத்த வேண்டும்.

விவசாய பண்ணையிலுள்ள விலங்குகளின் இயற்கையான நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு சுதந்திரமாக வாழ இடமளிக்க வேண்டும்.

சேதன விவசாய முறையில் விலங்குகளின் சேமநலத்தை பேணுவது மிக முக்கியமான நடவடிக்கையாகும். இங்கு விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் இடையில் பிணக்குகள் ஏற்படாதவண்ணமும், இரண்டிற்குமிடையில் உள்ளுறவு ஒன்றை ஏற்படுத்தி பாதுகாத்து வர வேண்டும்.

விலங்குகளின் உணவு சேதன உணவாக இருப்பதோடு அதனை முடியுமான அளவு பண்ணையிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் தேவையான அளவு விலங்கு உரமும் ஏனைய விலங்கு உற்பத்தியையும் பெற்றுக்கொள்ளலாம்.

பண்ணை நடவடிக்கைகளின் போது அனைத்து விதமான மாசடைதலையும் குறைத்துக் கொள்ளவேண்டும் (மண், நீர் என்பன மாசடைதல்).

பண்ணையிலும் அதன் சூழலிலும் உள்ள பல்வகைத்தன்மையை பாதுகாக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணை வேலையாட்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு அவர்களை திருப்திப் படுத்தும் விதத்தில் நடந்துகொள்ளவும் வேண்டும்.

பண்ணை நடவடிக்கைகள் மூலம் எந்தவித சூழல், சமூக பிரச்சினைகள் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டும். என்பன குறிப்பிடத்தக்கது.

இக் கொள்கைகள் படி செயற்படும் போது மண்வளம் பாதுகாப்பதோடு போசணை மிக்க விளைச்சளையும் பெற்றுக் கொள்ளலாம்.அத்தோடு உள்ளூர் விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பை அதிகரிப்பதோடு உள்ளூர் பொருட்களுக்கும் மதிப்பை ஏற்படுத்துகிறது என்பது தெட்ட தெளிவாக அறிய முடிகிறது. அத்தோடு இக்கால கொரோனா நிலவரத்தினால் ஏற்றுமதி, இறக்குமதி சிக்கல் இரசாயன உரங்களின் வருகை ஸ்தம்பிதம் போன்றன இவ் விவசாயத்திற்கு சாதகமாக் கொண்டு இக்காலத்தில் சேதன விவசாயத்தை மேற்கொண்டு பல பயனை பெறலாம் என்பதே சிறப்பான முடிவு.

தொகுப்பு:- செல்வி.மணிவண்ணன்.கனுஜா.BA(Hons) Fine Arts , Dip of agriculture, Agriculture Field Assistant on 2016.

உசாத்துணை

1.விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும்,இலவசம் பாட நூல், தரம் 9-A/L.

2."சேதன விவசாயம்" கலாநிதி M.A. லத்திப்: காத்தான்குடி, இணைய வழி(.2021.10.22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலர்கள் ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் - 19 இன் பலனாக எமது சமூகத்தில் ஏற்பட்ட தகவல் தொழினுட்ப மாற்றமும் அதன் விளைவுகளும்

சீனாவின் வூஹான் நகரிலே 2019 ஆம் ஆண்டில் பரவத்தொடங்கிய Covid – 19 எனும் கொடிய நோயினால் அனைத்து மக்களும் பாதிப்படைந்த வண்ணம் காணப்படுகின்றனர். இந் நோயினால் உலகில் உள்ள அனைத்து இடங்களிலும் அதிகளவான மக்கள் உயிரிழந்ததுடன் பாதிப்பும் அடைந்துள்ளனர். அந்த வகையில் Covid – 19 இனால் தகவல் தொழில்நுட்பத்தில் பாரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் Covid – 19 இனால் அரசியல், பொருளாதார, சமூக, உளவியல் தொழில்நுட்ப ரீதியாக பாரியளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அரசியல் ரீதியாக நோக்கும் போது அரசு ஸ்திரமாக இயங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அரச சக்கரம் இயங்குவதற்கு தேவையான உள்நாட்டு உற்பத்திகள் மேற்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்றுமதி, இறக்குமதி சீராக இயங்க முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. சுற்றுலாத்துறை பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. அரசுகள் மக்கள் மீது பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மக்கள் அரசின் மீது வெறுப்படைந்து பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டங்கள், உள்நாட்டு கலவரங்கள், யத்தங்கள் ஏற்படுகின்றது.

கொவிட்டுக்கு முன்னரான காலப்பகுதியில் மாநாடுகள், அரசியல், தலைவர்களின் சந்திப்புக்கள் நேரடியாக இடம்பெற்ற போது நாடுகளிற்கு இடையில் சுமுகமான புரிந்துணர்வுடன் கூடிய நட்புறவு காணப்பட்டது. தற்போது Zoom app, Googlemeet ஆகியவற்றின் மூலம் இடம்பெறுகின்றது. இதனால் சமூக இடைவினை குறைவடைகின்றது.

பொருளாதார ரீதியாக நோக்கும் போது Covid – 19 இனால் ஏற்பட்ட ஊரடங்குகள், பயணத்தடைகள் போன்றவற்றினால் அரச தொழில் புரிவோர் தவிர ஏனைய கூலித் தொழில் புரிவோர், கடற்தொழில் புரிவோர், தனியார் தொழில்கள் புரிவோர் தொழில்களுக்கு போகமுடியாத நிலைமை காணப்பட்டது. அரச தொழில் புரிவோர் போக முடியாத சூழல் காணப்படுகின்ற போதும் அவர்களுக்கு மாதாந்த சம்பளம் தடையின்றி தொடர்ச்சியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் சுயதொழில், தனியார் தொழில்கள் புரிவோர் வேலைவாய்ப்புக்கு போக முடியாத நிலைமையினால் அடிப்படை வசதிகளையே பூர்த்தி செய்ய முடியாத நிலைமையினால் வறுமையில் வாடுகின்றனர்.

வேலைத்தளங்கள் ஓரளவு தொழில்நுட்ப வசதிகளுடன் இயங்கிய வண்ணம் காணப்படுகின்றது. உதாரணமாக வங்கிகளில் Online Banking எனும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் தமது செயற்பாடுகளை மேற்கொண்டனர். வேலைத்தளங்களில் வேலையாட்கள் தமக்கிடையே நேரடித் தொடர்புகளைப் பேணுவதோ, பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதோ மிகவும் சிக்கலான நோய் நிலைமையை ஏற்படுத்துவதால் நேரடி நெருங்கிய தொடர்பை தவிர்க்க தகவல் தொழினுட்பத்தின் தேவை வேலைத்தளங்களில் மேலோங்கியுள்ளது. குறிப்பாக Work From Home ல் நிற்கும் உத்தியோகத்தர்கள் கட்டாயமாக தகவல் தொழினுட்ப சாதனங்களின் ஊடாக தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

Covid – 19 இனால் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ள காலப்பகுதியில் ஆரம்பக் கல்வியில் இருந்து உயர் பட்டப்படிப்புக்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிலையங்கள் போன்றவை மூடப்பட்டுள்ள காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் தேவை வலிமை பெற்றுள்ளது. உதாரணமாக Zoom, Google Class room போன்றவற்றை குறிப்பிடலாம். ஆசிரியர் மாணவர்களுக்கு Online வகுப்புக்களை வைப்பது இக்கால கட்டத்தில் பொருத்தமானதாக அமைந்தாலும் வறிய நிலையில் உள்ள மாணவர்களும் தொழில்நுட்ப வசதி குறைந்த இடங்களில் உள்ள மாணவர்களும் பெரிதும் பாதிப்படைகின்றனர். தொழில் நுட்ப சாதனங்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் உள்ள மாணவர்கள் இக் காலகட்டங்களில் கல்வியில் பின்னடைவை எதிர்கொள்கின்றனர். அத்துடன் உள ரீதியாகவும் பாதிப்படைகின்றனர். தொடர்ச்சியாக தொழில்நுட்ப சாதனங்களின் வழி கல்வியைத் தொடரும் மாணவர்கள் தொடர்ச்சியாக பார்ப்பதனாலும் சரியான கொண்ணிலையில் அமராது இருப்பதனாலும் அதிக உடல்வலி, கண்வலி, தலையிடி, முதுகுவலி, முள்ளந்தண்டு வடப் பாதிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நோய்களிற்கும் உளவியல் ரீதியாக சக நண்பர்கள் ஆசிரியர்களுடன் இடைவினை புரியாது இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடாது தனித்து தொடர்பு சாதனங்கள் ஊடே தொடர்பாடலை மேற்கொள்வதால் மனப்பிறள்வு, உளச்சோர்வு, பதற்றம், கவனச் சிதறல், சுறுசுறுப்பின்மை போன்றவற்றிற்கும் உள்ளாகியுள்ளனர்.

அனைத்து ஆசிரியர்களுக்கும் தகவல் தொடர்பாடல் சாதனங்களை கையாள முடியும் எனக் கூறமுடியாது இதனால் அவர்கள் மத்தியிலும் தாழ்வு மனப்பான்மை இன்னொருவரின் உதவியை நாடவேண்டிய சூழலும் மாணவர்களினை நமது நேரடிக் கண்காணிப்பில் ஒழுக்கத்துடன் கூடிய வழிப்படுத்தலை மேற்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

Covid – 19 காலப்பகுதியில் அனைத்துத் துறைகளிலும் தொழில் நுட்ப பாவனை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. குடும்ப மட்டத்தில் இருந்து சமூக மட்டம் வரை தவிர்க்க முடியாத அத்தியாவசிய தேவையாக, அத்தியாவசிய பொருளாக தொழில்நுட்ப சாதனங்கள் மாறிவிட்டன. Zoom, Coogle Class Room, Viber, Whatsapp, Smart Pass book, Home Banking, Online banking, Online Shoping, Duo, Google meet, Micro Soft theam, Google meet, microsoft theam, Google form ஆகிய மென் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது.

கொவிட் - 19 காலப்பகுதியில் அனைவரும் தகவல் தொழினுட்பத்திற்கு பழக வேண்டிய நிலை காணப்படுவதால் Covid – 19 இற்கு முன் இருந்த அறிவை விட தற்போது தகவல் தொழினுட்பம் சார்ந்த அறிவு அதிகரித்துள்ளது. Covid – 19 அனைத்து மக்களையும் உட்படுத்தினாலும் அதிலிருந்து ஓரளவேனும் மீளுவதற்கு தகவல் தொழினுட்பம் உதவி புரிந்துள்ளது. விந்தை மிகு விஞ்ஞான உலகில் Covid – 19 இனை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பூசிகள் கண்டறியப்பட்டாலும் அதற்கு நிரந்தரமான தீர்வு இன்னும் எட்டப்படவில்லை. எனவே இந்த சூழ்நிலையில் மனிதர்களாகிய நாங்கள் தகவல் தொழினுட்பத்திலிருந்து நமக்கு நன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்ற, பாதகமான விடயங்களைப் பகுத்தறிந்து தகவல் தொழினுட்பத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவோம்.

திருமதி. தவேந்திரன் மதுரா
**BA(Hons)**
வலி வடக்கு பிரதேச சபை
உப அலுவலகம்
காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவும் மனித வாழ்வும்

கொரோனா உலகிற்கு தந்த பாடம்
எச்சரிக்கை அல்ல அச்சத்தின் உச்சம்
மனிதாபிமானம் கேள்விக் குறியாகும்
ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு பேரிடர்
பேர் இழப்புக்கள்

பரிமாணங்கள் வேறுபடலாம்
பலி கொடுக்கப்படுவது என்னவோ
மனித உயிர்கள் தான்
பணம் படைத்தவன் பதவியில் உயர்ந்தவன் - என்ற
பாரபட்சம் பார்ப்பதில்லை அழிவு

கொரோனாவின் பேரழிவு பெரும் அச்சமும்
மனிதனை யோசிக்க வைத்திருக்கிறது.
குடும்பங்களை வீட்டுக்குள் முடக்கி
ஒன்றுபட வைத்திருக்கிறது.
உறவுகளின் உணர்வுகளை நேசிக்க வைத்திருக்கிறது.

பிரிந்த உறவுகளை காலம் யோசிக்க வைத்திருக்கிறது.
கைப்பேசியில் முகம் பார்த்தவனை
மனிதனின் முகம் பார்த்துப் பேச நேரம் ஒதுக்கியிருக்கிறது
யோசிக்க வேண்டும் - நீ
காலத்தின் தீர்ப்பு இது

மனித குல அழிவிலும் பொருளாதார பேரழிவிலும்
கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்றுதான்
உயர்வு தாழ்வு பாராமல் உயிர்களிடத்தில்
அன்பு காட்டுங்கள் - காலம் நம் கையில் என்று
கொக்கரித்த மனிதனை கை தட்டி சிரிக்கிறது.

நம் உயிர் உள்ளவரை தான் வாழ்க்கை
நிதர்சனம் அது தான் - உடலளவில் ஒன்றுபட்டு
உணர்வுகளில் தனித்திருந்தோம் - இன்று
உணர்வுகளால் ஒருமித்து உடலால் தனித்திருந்து
விரட்டியடிப்போம் கொரோனாவை

ஜெ.ஜனனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் - 19 உம் தொலைதூர வாசிப்பும்

மூச்சுவிடும் துளிகளுடன் பரவி
கொள்ளையுற்ற கொரோனா
கரைத்துப்போனது கண்ணீரை
மட்டுமல்ல கல்விக்கடலையும் தான்
காலை எழும்பி கடன் தீர்த்து
சாலைநேரம் வரை புரட்டும்
கொப்பியையும் தான்

தொலைதூரக் கனவுகளோடு
புத்தகம் சுமந்த கைகளில்
தொல்லை தரும் கைபேசி
கையிருப்பதனால்
சுருங்கிபோன சூமில்
மலிந்து போன பாடங்கள்
பட்டியலில் காணாமல் விளக்கங்கள்

தாளின் வாசம் நுகர்ந்து
எழுத்துக்களோடு கலந்து
வசனத்தில் சுவை தேடிய நாட்கள்
கொரோனாவில் தொலைந்து போனதே
ஆமைப்பூட்டில் வாசகசாலை முடக்கம்
முந்திட்டே சிலந்தி வலைகள் நெருக்கம்

தொழில்நுட்பம் தினம்
கண்ணையும் அரித்து நிற்க
நாவில் சொற்கள் உளறி போக
மெல்ல மெல்ல கறையான்
பதம் பார்க்கிறது புத்தகங்களில்...............

தி.கௌசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைதூர வாசிப்பு

இன்றைய நவீன உலகில் வாசிப்பானது மிக குன்றிய நிலையில் காணப்படுகிறது. "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற பழமொழியின் ஊடாக வாசிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். நவீன சாதனங்கள் வருவதற்கு முன்பு மனிதன் தன்னிலை மறவாமல் தன்னுடைய வாசிப்பு திறனை மேம்பட உயர்த்திக் கொண்டான். பத்திரிகைகள் வாசிப்பது, புத்தகங்கள், சஞ்சிகைகள், சுவர் ஒட்டிகள் மேலும் கண்ணுக்கு புலப்படும் விடயங்களை ஆராய்ந்து உணர்ந்து வாசித்துக் கொண்டான். இன்றைய நவீன உலகில் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் காரணமாக நூல்களை தேடி படிக்கும் ஆற்றல் குறைவடைந்துவிட்டது.

தற்காலத்தில் நூலகங்கள்,தொலைதொடர்பு சாதனங்கள் வருவதற்கு முதல் புத்தகங்களை சேகரித்து, சஞ்சிகைகளை சேகரித்து ஒருவர் ஒருவராக வாசித்து புத்தகங்களை பண்டமாற்று முறையில் மாற்றிக்கொண்டனர். தேவையான புத்தகங்களை வாங்கி ஒருவர் படித்து முடிய மற்றவர் படித்தனர். இவ்வாறு தான் பண்டைய கால மக்களின் வாழ்க்கைமுறை இடம்பெற்றது. ஆனால் தற்பொழுது நூலகங்கள், வீட்டில் நூலகம் ஒன்றை அமைத்து வைத்திருத்தல், தொலைத்தொடர்பு சாதனங்கள் ஊடாக நூல்களை பெற்றுக்கொண்டார்கள். பெரும்பாலும் நூலகங்களுக்கு செல்லுபவர்கள் மிகக்குறைவு. கூடுதலனானோர் தொடுதிரை தொலைபேசி மூலம் புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்தனர். புத்தகங்களை கைகளால் தொட்டு உணர்ந்து நூல்களின் வாசங்களை நுகர்ந்து சந்தோஷமாக வாசிக்கும் காலம் கொவிட் - 19 தொற்றால் தடையாக இருந்தது.

நூலக வாசகர்களுக்காக ஒவ்வொரு பிரதேச நூலகங்களும் ஒரு திட்டத்தினை முன்வைத்திருக்கின்றார்கள். வெவ்வேறு வகையான புத்தகங்களை வெவ்வேறு இணையத்தள முகவரியினூடாக எடுத்து வாசிப்பதையும் விட எல்லா நூல்களையும் ஒரே இடமாக online மூலம் காட்சிப்படுத்தவுள்ளனர். மேலும் கைவைத்தியம், நோய்களுக்கான ஹதற்பாதுகாப்பு முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள், சுதேச மருத்துவம் பற்றி எழுதப்பட்ட புத்தகங்கள்/கட்டுரைகளைத் தொகுத்து அவற்றை சமூக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் மூலம் துண்டுப்பிரசுரங்களாக விளம்பரப்படுத்தல். முகநூல் பக்கத்துடன் இதுவரை இணையாத வாசகர்களை அடையாளம் கண்டு அவர்களை முகநூல் பக்கத்துடன் இணைத்துக்கொள்வதற்கான நிகழ்ச்சி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் முகநூல் வாசிப்பு தொடர்பான மேற்கோள் உரைகள் மற்றும் கருத்துக்களை பரிமாற்றிக்கொள்ளலாம். நூலகங்களினூடாக மன்றங்களை தயார்படுத்தி இணையத்தின் உதவியுடன் செயற்படுத்தி நூல்களை வெளியாடுதல்.

**"கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக"** ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் உருவாக்கும் நூல்களை தேடி விரும்பி கற்று அதற்கு ஏற்றவாறு தமது வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும். என்ற திருவள்ளுவரின் குறளின்படி நல்ல நூல்கள் ஓர் நல்ல நண்பனுக்கு சமனானவை. வீட்டில் நூலகங்களை அமைத்து வைத்திருப்பவர்களை சான்றிதழ்கள் மூலம் பாராட்டுக்களையும் தெரிவித்து இணையத்தினூடாக அந்த புத்தகங்களை விற்கவும் வேறு புத்தகங்களை சேகரிக்கவும் நடைமுறைப்படுத்தல். ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள நூலகங்களை தெரியப்படுத்தும் முகமாகவும் பழங்கால நூல்களை கண்டறிய உதவும் செயற்றிட்டமாகவும் கொவிட் - 19 பாதிப்பின் ஊடாக மக்கள் வீட்டில் முடங்கி இருந்து வாசிப்பை கைவிட கூடாது என்பதற்காகவும் இணையத்தினூடாக பல்வேறு வழிமுறைகளை நடாத்துதல்., இதன் மூல பயனாக மாணவர்களுக்கும், முதியவர்களுக்கும், இளைஞர் யுவதிகளுக்கும் பெரும் உதவியை வழங்கும்.

வாசிப்பானது எமது வாழ்க்கையின் மிக முக்கியமான ஒன்றாகும். எந்த சூழ்நிலையிலும் தடுமாறும் நிலையை குறைப்பதற்கு உதவும் "யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு" என்ற குறளினூடாக வள்ளுவர் உணர்த்துவது யாதெனில் கல்வியறிவினால் சிறந்து விளங்கும் சான்றோர்க்கு எந்த நாடும் சொந்த நாடு, எந்த ஊரும் சொந்த ஊர் ஆகும். கல்வியால் இத்தகைய சிறப்பு வரும்போது ஒருவன் தான் சாகும் வரையில் கற்காமல் காலம் கழித்தலாகாது என வள்ளுவர் குறளின் மூலம் சிறப்பித்து கூறுகிறார். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வாயிலாக கற்றவனுக்கு எங்கு சென்றாலும் மதிப்பு உண்டு. ஒவ்வொரு சூழ்நிலையிலும் உதவி புரியும். எனவே மக்களாகிய அனைவரும் வாசிப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தை அறிந்து இந்த கொவிட் - 19 இன் காரணமாக நம்மை வெளிக்கொண்டு வந்து எம்மை உணர வைக்க தொலைதூர வாசிப்பானது மிகவும் முக்கியத்தைப் பெறுகின்றது.

**நாம் வாழ்வின் முன்னணி**
**நமது செயலின் முன்னணி**
**நமது பண்பின் முதலாளி**
**வாசிப்பு எனும் அறிவாளி**

- கண்டதையும் கற்பவன் புலவன் -

**து.உதயகுமாரன்**
**நூலக பரிசாரகர்**
**பொதுநூலகம் காங்கேசன்துறை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களது ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறைப் பிரதேசமும், சைவாலயங்களும் ஒரு சமகாலப் பார்வை

சைவத்தமிழ்ப் பண்பாட்டுப்ப பாரம்பரியத்தில் காங்கேசன்துறைப் பிரதேசம் மிகவும் முக்கியத்துவமுடையதொரு பிரதேசமாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இப்பிரதேசம் தரை, மற்றும் கடல் வழிப் போக்குவரத்து, விவசாயம், கல்வி, நீதிபரிபாலம், நிர்வாகம், தொழிற்றுறை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் சிறந்தோங்கியிருந்தது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பிருந்த நாகர் ஆட்சிக்காலம் தொடக்கம் மாருதப்புரவீகவல்லியின் வருகை நிகழ்ந்த காலம் முதலாக, பிற்காலச் சோழராட்சி நிலவிய காலம், தமிழ் அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி நடத்திய காலம் வரை இப்பிரதேசத்தில் சைவத்தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சி பேணப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். இக் காலத்தில் கோவிற்கடவை என அழைக்கப்பட்ட கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய மூன்று பிரதேசங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதற்கு இப் பிரதேசத்தில் அமைந்திருந்த மிக முக்கியமான மூன்று சைவ ஆலயங்களே காரணமாகும். நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கசாயத்துறை ஆனந்த பிள்ளையார் ஆலயம். ஆகியவையே அவையாகும். இச் சைவ ஆலயங்களே இக் காலத்தில் தமிழர் பண்பாட்டின் அடித்தளமாக விளங்கியிருந்தது. ஐரோப்பியர் ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆட்சியில் இப் பிரதேசம் கலாச்சாரப் பண்பாட்டு ரீதியில் சற்று நலிவுற்றிருந்தாலும், மற்றைய பல துறைகளிலும் செல்வாக்குடனேயே திகழ்ந்து வந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாணத்திற்கும் தென்பகுதிக்கான தரை வழிப் போக்குவரத்துப்பாதை அமைக்கப்பட்டதும் போக்குவரத்து ரீதியில் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் முக்கியத்துவம் குறைந்தது. எனினும் ஏனையவற்றில் இவற்றின் முக்கியத்துவம் அதிகரித்தே வந்துள்ளது.

இன்றைய காலத்தில் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டினை பொறுத்த வரையில் அவற்றின் வளர்ச்சிக்கும் நீண்டகால தொடர்ச்சிக்கும் இப் பிரதேசத்தின் சைவ ஆலயங்களே முக்கிய பங்களிப்பினை வழங்கி வந்துள்ளன. இப் பிரதேசத்தின் கோயிற்கடவைப் பிரதேச ஆலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்ந்த வேறு பல சைவ ஆலயங்களும் கூட பல வகைகளிலும் முக்கியத்துவம் உடையதாக விளங்கியுள்ளன. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சைவ ஆலயங்களில் பல ஆலயங்கள் பிரசித்தி பெற்றவையாக இருப்பதுடன் தொன்மையானதாகவும், வரலாற்றுப் புகழ் மிக்கவையாகவும், ஆலய அமைப்பு கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், ஆகியவற்றில் சிறப்புக்களை வெளிப்படுத்துபவையாகவும், பூசை வழிபாடுகள், ஆலயக் கிரியைகள், விசேட விழாக்கள், மகோற்சவ விழாக்கள், ஆகியவற்றில் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளவையாகவும் உள்ளன.

எனினும் இப்பிரதேசத்தின் சைவ ஆலயங்களின் வரலாற்றைப் பொறுத்தவரை 20ம் நூற்றாண்டில் இறுதி இரண்டு தசாப்த காலங்களும் , 21ம் நூற்றாண்டின் முதற் தசாப்த காலமும் ஓர் இருண்ட காலம் என்றே கூறலாம். 1980களின் பிற்பகுதியில் ஏற்பட்ட யுத்தமும், இராணுவ நடவடிக்கைகளும் இப் பிரதேசம் முழுமையாக உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டமையும், இப் பிரதேசத்தில் பன்னெடுங்காலமாக உயர்ந்து நின்ற பல சைவ ஆலயங்களை சிதைத்து அழித்ததுடன் பல கோடி பெறுமதியான சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றையும் அழித்தொழித்துவிட்டது. இவை தவிர இப்பிரதேசத்தில் மக்களின் பாரம்பரியமான வாழ்விடங்கள், குடிமனைகள், சொத்துககள் ஆகியவையும் அழிக்கப்பட்டதுடன் உயிர்ச் சேதங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இன்று இப் பிரதேசங்கள் பல இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பதுடன் மக்கள் படிப்படியாக மீள் குடியேறுவதுடன் தமது பாரம்பரிய வழிபாட்டிடங்களை மீள் புனரமைப்புச் செய்து வருகிறார்கள். சில ஆலயங்கள் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு கும்பாபிசேகங்களும் நடைபெற்றுள்ளதுடன், பூசை வழிபாடுகளும் உற்சவங்களும் நிகழ்ந்து வருகின்றன. எனினும் இன்னும் சில பகுதிகள் விடுவிக்கப்பட்ட வேண்டியிருப்பதுடன் அவ்விடங்களிலுள்ள ஆலயங்களும் மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது.

இக் காங்கேசன்துறைப் பிரதேசத்தில் மிகமிக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில தொல்லியல் அகழ்வாய்வுகள் எமது தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுவதாயுள்ளது. என கலாநிதி செ. கிருஷ்ணராசா அவர்கள் தனது அண்மைய ஆய்வுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையொன்றில் கூறியுள்ளார். அதாவது தற்போது அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் மயிலிட்டித் துறைமுக புனர்நிர்மான வேலைத்திட்டத்தின் போது கடற்படுக்கையை ஆழப்படுத்தும் செயற்பாட்டின் போது கிடைத்த சில தொல்லியல் எச்சங்கள் மிகுந்த கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. பழங்காலத்திற்குரிய கல்லினால் செய்யப்பட்ட ஆயுதங்கள் (கல்லாயுதம்), வெண்படிக்கண்ணாடிக்கல்லான Blade எனப்படும் கருவி, கல்லினால் செய்யப்பட்ட முத்திரை போன்ற அமைப்புடைய வட்டவடிவமான கல், சுடு மண் நாணயக்குற்றி, கறுப்பு, சிவப்புமட்பாண்டங்கள், ரோமானிய, கிரேக்க மட்பாண்டங்கள் என்பன இங்கு கிடைத்துள்ளன. இவை குறுணிக் கற்காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து பெருங்கற்கால வாழ்வு முறையிலான குடியிருப்புக்கள் மயிலிட்டிதுறை முகத்தினையண்டியுள்ள தையிட்டி, வீமன்காமம், பழந்துறை, வீரமாணிக்கதேவந்துறை, பெரியதேவந்துறை, கட்டுவன், நரசிங்கதேவன்புலம், சங்குவத்தை, ஆகிய பழங்கிராமங்களில் நிலை பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகிறது. எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தொல்லியல் ஆய்வுகள் மூலம் இதன் பலபரிமாணங்கள் வெளிப்படுத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் பிரதேச சபைகளின் நிர்வாக கட்டமைப்பு ரீதியாக காங்கேசன்துறைப் பிரதேசமானது (காங்கேசன்துறை உப அலுவலகம்) காங்கேசன்துறை மேற்கு (J/233) காங்கேசன்துறை மத்தி (J/234) காங்கேசன்துறை தெற்கு (J/235) தையிட்டி கிழக்கு (J/247) தையிட்டி வடக்கு (J/249) தையிட்டி தெற்கு (J/250) மயிலிட்டிதுறை வடக்கு (J/251) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள சைவ ஆலயங்கள் பற்றிய பார்வையாகவே இக்கட்டுரை அமைகிறது.

காங்கேசன்துறை மேற்கில் அமைந்துள்ள யாத்திரை செல்லப்பிள்ளையார் ஆலயம் பழைமையான ஓர் ஆலயமாகும். யாழ் காங்கேசன்துறை வீதிக்கண்மையில் அமைந்துள்ள இவ்வாலயம் இவ்வீதியில் சென்றுவருவோரின் வழிபடு தலமாகவும் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், வசந்தமண்டபம், மணிக்கூட்டுகோபுரம், மடப்பள்ளி, களஞ்சிய அறை ஆகிய கட்டட அமைப்புக்களுடன் முருகன், கஜலட்சுமி, வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், நந்தி, பலிபீடம் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் இவ்வாலயம் அமைந்திருந்தது. இவ்வாலயத்தின் முன் பக்கத்தில் வரையப்பட்டிருந்த ஓவியம் மிகுந்த கவனத்தைப் பெற்றிருந்துது. அதில் விநாயகர் அம்மை அப்பரிடம் மாங்கனி வாங்கும் ஓவியம் மிகவும் தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது. அதற்கருகில் ஆலய வருங்கால அமைப்புத்திட்டம் எனும் ஓவியமும் வரையப்பட்டிருந்தது. அதில் எதிர்காலத்தில் அமைக்கப்படவிருந்த ஐந்துதள இராஜ கோபுரத்துடனும், இரு மணிக்கூட்டு கோபுரத்துடனும் கூடிய ஆலயத்தின் அமைப்பு வரையப்பட்டிருந்தது. எனினும் இவ் ஓவியம் தற்போது இல்லை. அண்மைய ஆலயப்புனரமைப்பின் போது அழிவடைந்து விட்டது. யுத்த காலத்தில் மிகவும் கடுமையாகச் சேதமுற்றிருந்த இவ்வாலயம் தற்போது புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது. இரண்டு மண்டபங்களுடன் கூடிய சிறிய கோயிலாக பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்த மாம்பிராய் வைரவர் ஆலயம் யுத்தகாலத்தில் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. மக்களின் மீள் குடியேற்றத்தின் பின்னர் தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இப் பகுதியில் உள்ள ஐயனார் ஆலயம் தற்போது உயர் பாதுகாப்புவலயப் பிரதேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஆலயத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மாங்கொல்லை வைரவர் ஆலயம், சீமெந்து கூட்டுத்தாபன வைரவர் ஆலயம் என்பன இப்பகுதியில் அமைந்துள்ள ஏனைய ஆலயங்களாகும்.

காங்கேசன்துறை மத்தியில் அமைந்துள்ள கயாத்துறை ஆனந்தப்பிள்ளையார் ஆலயம் மாருதப்புரவீகவல்லி காலத்திற்கும் முந்தியது. மாருதப்புரவீகவல்லி வழிபட்ட தலமாகவும் கருதப்படுகிறது. மாருதப்புரவீகவல்லியும் அவளது படைபரிவாரத்தினரும் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு ஈழத்தை நோக்கி (காங்கேசன்துறை) வரும் போது அவர்கள் பயணம் செய்த படகு புயற்காற்றினால் அங்கும் இங்கும் ஆடவே தமது பயணத்தில் ஏற்பட்டிருக்கும் இடையூறை நீக்கியருளுமாறு அவர்கள் ஆனந்தப் பிள்ளையாரைத் தமது மனத்தின் கண் வேண்டி வழிபட்டதாக மாவைக் கந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பற்பாட்டு கூறுகிறது. அத்துடன் தட்சிணகைலாசமான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை ஆகியவற்றிலும் இவ்வாலயம் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. இத்தகு பெருமை பெற்ற இவ்வாலயத்தின் மூலமூர்த்தி சுயம்புலிங்கப் பிள்ளையாராகும். திரிபுர சுந்தரி, ஸ்ரீ கதிரவேற் குமரன், வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுடன் கூடிய இவ்வாலயத்தில் பூஜை வழிபாடுகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வந்தன. யுத்த அனர்த்தச் சூழல் நிலவிய போது உயர் பாதுகாப்பு வலயத்துள் இருந்த ஆலயம் மிகக் கடுமையாகச் சேதமுற்று அழிவடைந்திருந்தது. தற்போது ஆலயம் முழுவதுமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. முன்னர் வழிபடப் பெற்ற சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலய முன்றலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆனந்தப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலேயே முத்துமாரியம்மன் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் ஆகியனவும் அமைந்துள்ளன. 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் பூசை வழிபாடுகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வந்த இவ்வாலயங்களும் யுத்தத்தால் கடுமையாகச் சேதமுற்றிருந்தன. தற்போது புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர வைரவர் ஆலயம், குட் செற் பிள்ளையார் ஆலயம் ஆகியனவும் இக் கிராம சேவையாளர் பிரிவினுள் உண்டு.

காங்கேசன்துறை தெற்கில் குருநாத சுவாமி கோயில், குமார கோயில், கூடலூர் இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில், காளி கோயில், முத்துமாரி அம்மன் கோயில் ஆகியன உண்டு. குருநாதசுவாமி கோயில் போர்த்துக்கீசர் காலத்திற்கும் முற்பட்டது. சுன்னாகம் வரத பண்டிதர் (கி.பி 1656 – கி.பி 1716) குருநாதசுவாமி கிள்ளை விடு தூது எனும் தூதுப்பிரபந்தமொன்றை இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடியுள்ளார். யுத்தத்திற்கு முன்னர் திருவிழாக்கள் மற்றும், விசேட பூசை வழிபாடுகளுடன் சிறப்புற்றிருந்த இவ்வாலயம் தற்போது முற்றாக அழிவடைந்துள்ளது. ஆலயத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது. குமார கோயில் என்பதும் ஓர் முருகன் கோயிலாகும். இக் கோயில் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. மூல மூர்த்தி வேற்பெருமான் பரிவார மூர்த்தியாக பிள்ளையார் உள்ளார். மூலஸ்தானம், அர்த்தமண்டபம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனமண்டபம் ஆகியவற்றுடன் மணிக்கோபுரம், கிணறு ஆகியனவும் உண்டு. மணிக்கோபுரம் 1979 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. தலவிருட்சமாக அரசு உள்ளது.

தையிட்டி கிழக்கில் அமைந்துள்ள கணையவிற்பிள்ளையார் ஆலயம் அல்லது கணேசவிற் கோட்டப்பிள்ளையார் ஆலயம் பழம் பெருமையும், வரலாற்றுப் புகழும் மிக்க ஆலயமாகும். இது சோழர் காலத்தில் சோழ அரசின் பிரதானியாக விளங்கிய வரராசசிங்கவளவன் எனும் மன்னனால் கட்டப்பட்டது. 200 வருடங்களுக்கு மேலாக மகோற்சவமும், விசேட விழாக்களும் நடைபெற்ற ஆலயமாகும். இவ்வாலயத்தில் பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்றுள்ளது. கட்டடக்கலை அம்சங்களில் சற்று வித்தியாசமான அமைப்பையும் இவ்வாலயம் கொண்டிருந்தது. ஆலயத்திற்கு மேற்குப் பக்கத்தில் ஒரு திருக்குளம் (கணையவில்குளம்) அமைந்திருப்பதால் குளத்தடிப் பிள்ளையார் ஆலயம் எனவும் அழைக்கப்படுகின்றது. 1910,1924,1953,1981 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிசேகம் நடைபெற்றுள்ளது. மூலமூர்த்தி சர்வார்த்த சித்திவிநாயகப் பெருமான் என்பதாகும். முருகன், சண்டேஸ்வரர், வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுமுண்டு. அண்மையுத்த அனர்த்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இவ்வாலயத்தில் தற்போது புனருத்தாரணப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. புதிதாக கஜலட்சுமி சந்நிதியும் கட்டப்பட்டு வருகிறது. சுன்னாகம் வரத பண்டிதரால் இயற்றப்பட்ட மிகப் பழைமையான ஊஞ்சல் பதிகம் இவ்வாலயத்திற்கு உள்ளது. எனினும் அப் பதிகத்தின் மூன்று செய்யுள்களே தற்போது கிடைக்கின்றன. தையிட்டி கிழக்கில் அமைந்துள்ள இன்னொரு பிள்ளையார் ஆலயம் அரசடி சித்தி விநாயகர் அலயமாகும். 300 வருடங்களுக்கு முற்பட்ட இவ்வாலயமும் வரராசசிங்க வளவன் எனும் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இந்தியாவிலிருந்து கொண்டுவந்த லிங்கத்தை அரசமரத்தின் கீழ் வைத்து வழிபட்டதாகக் கூறப்படுகிறது. சங்கிலி மன்னன் இவ்வாலயத்தை கட்ட எடுத்த நடவடிக்கை அவனது வீழ்ச்சியால் கைவிடப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. நித்திய பூசைகளும், விசேட திருவிழாக்களும் இவ்வாலயத்தில் நடைபெற்று வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு சித்திரை மாதம் 2017 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டது. கரையான்காடு வப்பத்தை அம்பாள் வைரவர் ஆலயமும் இப் பகுதியிலுள்ள ஓர் ஆலயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையிட்டி வடக்கில் துர்க்கை அம்மன் ஆலயம் உள்ளது. மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம், மணிக்கோபுரம் ஆகியவற்றுடன் மேற்கு வாயிலையுடைய இவ்வாலயம் மிகவும் சேதமடைந்துள்ளது. ஆலயத்தின் கொடிக்கம்பம் தூர்வடைந்த நிலையில் உள்ளது. தையிட்டி தெற்கில் தூதிலிடைக் கண்ணகி அம்மன் ஆலயம், குருந்து வீதி கண்ணகி அம்மன் ஆலயம், முனியப்பர் ஆலயம், சுடுகாட்டு ஞானவைரவர் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம், என்பன உள்ளன. தூதிலிடைக் கண்ணகி அம்மன் ஆலயம் 1825 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு உள்ளது. மூலமூர்த்தி கண்ணகி அம்மன், பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர், சந்தான கோபாலர் ஆகியோர் உள்ளனர். நித்திய பூசையுடன் விசேட உற்சவங்களும் நடைபெற்று வந்தது. அண்மைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆலயம் தற்போது பாலஸ்தானம் செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. குருந்துவீதி கண்ணகி அம்மன் ஆலயம் போர்த்துக்கீசர் காலத்திற்கு முற்பட்டது. பின்னர் போர்த்துக் கீசரால் இவ்வாலயம் இடிக்கப்பட்டது. அனேக ஆண்டுகளுக்குப் பின் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை வைத்து ஊர் மக்கள் கண்ணகை அம்மன் ஆலயம் என பெயர் சூட்டி வழிபட்டு வந்தனர். தினமும் ஒரு காலப்பூசையுடன் விசேட காலங்களில் வழிபாடுகளும் நடைபெற்று வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆலயம் தற்போது புனரமைப்புச் செய்யப்படுகிறது. முனியப்பர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 22.07.2019 இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. சுடுகாட்டு ஞானவைரவர் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. சித்திரைப் பௌர்ணமியில் விசேட விழா இங்கு நடைபெறுகிறது.

மயிலிட்டிதுறை வடக்கில் வீரமாணிக்க தேவன்துறை கண்ணகி அம்மன் ஆலயம் முனையன் வளவு முருகையன் ஆலயம், தோப்பு பிள்ளையார் ஆலயம், சங்குவத்தை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் திருப்பூர் பேச்சியம்மன் என அழைக்கப்படும் முத்துமாரி அம்மன் ஆலயம், மார்பு நோய் வைத்தியசாலை, முருகன் ஆலயம் ஆகியன அமைந்துள்ளன. வீரமாணிக்க தேவன்துறை கண்ணகியம்மன் ஆலயத்தில் பல்லவர் காலத்துச்சிலா விக்கிரகமான கண்ணகி அம்மன் விக்கிரகம் உண்டு. பரிவார மூர்த்திகள் சிவன், அம்மன், வைரவர், தினமும் மூன்று காலப்பூசையுடன் விழாக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்று வந்தது. மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தில் கண்ணகி வரலாறு சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. மயில்வாகன ஐயர் பாடிய ஊஞ்சல் பதிகம் இவ்வாலயத்திற்குள்ளது. அன்றைய யுத்த அனர்த்தம், உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக ஆலயம் சேதமடைந்திருந்தது. ஆலயத்தின் பழைய சித்திரத் தேரும் சிதைவடைந்துள்ளதுடன் அது தற்போது ஆலய முன்றலில் காணப்படுகின்றது. மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டதும் 2018 இல் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டதுடன் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று 2019 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. முனையன் வளவு முருகன் ஆலயம் இற்றைக்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்கட்டதாகும். மூலமூர்த்தி வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான். அன்றைய யுத்த அனர்த்தம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் காரணமாக ஆலயம் மிகவும் பாதிப்படைந்திருந்தது. தற்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்று 04.09.2019 இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக ஐந்துதள இராஜகோபுரமும் கட்டப்பட்டுள்ளது. தற்போது கந்தசஷ்டி உற்சவம் உட்பட பல உற்சவங்களும் சிறப்பாக நடைபெற தொடங்கியுள்ளது. சங்குவத்தை மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் முற்றாகத் தரைமட்டமாகியிருந்தது தற்போது புதிய ஆலயத்தின் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. வீரமாணிக்க தேவன்துறை கண்ணகியம்மன் ஆலயத்துடன் இணைந்ததாக உள்ள தோப்பு பிள்ளையார் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

திருப்பூர் பேச்சியம்மன் ஆலயம் 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சிறு கொட்டகை அமைப்புடைய ஆலயத்தில் பேச்சியம்மன் வழிபாடு நீண்டகாலமாக நடைபெற்று வந்தது. மயிலிட்டித்துறைக் கிராம மக்களுக்கும் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள ஊர்களுக்குமிடையில் வர்த்தக, வாணிப, கலாசாரப்பண்பாட்டுத் தொடர்புகள் மிக நீண்டகாலமாகவே நிலவி வந்துள்ளது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள திருப்பூர் என்ற ஊரிற்கும் இவ்வம்மன் ஆலயம் அமைந்துள்ள ஊரிற்குமிடையில் நெருங்கிய பல ஒற்றுமைகள் இருப்பதை அவதானித்த இவ்வூர் மக்கள் இவ்விடத்திற்கு திருப்பூர் எனப் பெயரிட்டு திருப்பூர் முத்துமாரி அம்மன் என பெயர் வழங்கி வந்தனர். 1987 ஆம் ஆண்டு ஆலயத்தை கற்கோயிலாக கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தன. துரதிஷ்ட வசமாக 1990 இல் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தினாலும், இடம்பெயர்வினாலும் இம்முயற்சி பாதிக்கப்பட்டதுடன் ஆலயமும் முற்றாக தரைமட்டமாகியிருந்தது. மீண்டும் 30 வருடங்களிற்குப்பின் மக்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டதும் ஆலயத்தை மீளக் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. 05.09.2019 இல் மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டப்பெற்று ஆலயப்புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருப்பூர் ஒன்றியம் இவ்வாலய பரிபாலனத்தை மேற்கொண்டு வருகிறது.

இக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஆலயங்களின் வரலாறு முழுமைப்படுத்தப்பட்ட வரலாறல்ல. ஆலயங்கள் பற்றிய வரலாற்றுத் தேடலின் ஆரம்பப் புள்ளியாகும். எதிர்காலத்தில் இச் சைவாலயங்களின் வரலாறு முழுமையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். முப்பது வருடங்களாக நடைபெற்ற அண்மைய யுத்தமும், உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனமும் வலிகாமம் வடக்கின் பெரும்பாலான பகுதிகளை சிதைத்து அழிந்துள்ளதால் எம்மிடமிருந்த பல விடயங்கள் மறைந்து போயிற்று. எனவே அதனை மீட்டெடுப்பதற்கும், இருப்பவற்றை பாதுகாப்பதற்கும் எமது இப் பிரதேசத்தின் அத்தனை விடயங்களும் ஆய்வுசெய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசரமானதும், அவசியமானதுமான செயற்பாடாகும். இதன் மூலம் எமதும் எமது எதிர்கால சந்ததியினதும் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு வழிசமைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

**சண்முகலிங்கம் சஜீவன்**
**(வாசகர்)**
**பன்னாலை,**
**தெல்லிப்பழை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Inpact Of Corona In Education

2019 Dec 31st we were extremly waited to welcome our new year. But nobody knows their is a silent killer slowly spread all over the world. After knowing about Covid – 19 March 2020 started quarantine and students thought they have a long vacation and enjoy their long time nonstudy life. But then schools and institutions started online classes in zoom or other applications to cover up sylabus. 50% students take it to build up their study level, others who don't want to study and shine their future life but they not able to buy a electronic device to study because of their family condilion.

Three category student's groups found in this covid period. Some of the become depressd and infected many kind of diceases. Corona inpact Possitive and negative part in students study life. students must know about what they want and a what they become. They have to decide what role they play with this society.

**Reader**
**Miss.R.Kaaththiyayini**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளங்கனிந்த நன்றிகள்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

**- திருக்குறள்**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எமது பொது நூலகத்தினால் வெளியிடப்படும் "காங்கேசன் முரசு – 02" மலர் சிறப்பாக வெளிவருவதற்கு அரும்பணியாற்றியவர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கிய தவிசாளர், செயலாளர் ஆகியோருக்கும் மலரினை வளப்படுத்திய ஆசிரியருக்கும் பிரதேச பெருமக்களுக்கும் அனைவருக்கும் எமது மலர் குழுவினர் சார்பில் நன்றிகளைக் கூறுகின்றோம்.

இம் மலர் சிறப்பாக அமைய விளம்பரங்கள் தந்துதவியவர்கள் அன்பளிப்புக்கள் வழங்கியவர்களுக்கும், சிறப்பு மலரினை கணனி வடிவமைப்புச் செய்தவர்களுக்கும் செம்மையாகவும் அழகாகவும் அச்சிட்ட சந்நிதியான் பிறிண்டேர்ஸ் பதிப்பகத்தாருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவரினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

**மலர் வெளியீட்டுக் குழுவினர்**
**உப அலுவலகம்**
**பொது நூலகம்**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனைத்து பொருட்களும்
தரமான, நியாயமான
விலையில் நாடவேண்டிய இடம்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org